PUBLIC LIBRARY,
JAFFNA

உ
கணபதி துணை

# கணபதி தத்துவம்



JPL
C1954

வெளியீடு :
...ந்தசுவாமி தேவஸ்தானம்
நீர்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY,
JAFFNA,

சகல வகையான புத்தகங்களுக்கும்
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
119-1/1, கே. கே. எஸ் வீதி
யாழ்ப்பாணம்.
போன்; 24234.



## விநாயகர் துதி

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக்காக வனத் தணைவோனே
தந்தைவலத்தால் அருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

பொதுசன நூலகம்
25.03.1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY,
JAFFNA,

# கணபதி தத்துவம்

2003 M

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



KOHA
JPL

85719

1954 c.c

85719 c.c

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்
நீர்வேலி.

பிரமோதூத ௵ புஷ்ய ௴ புஷ்யம்

1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பதிப்பு : 1991

வெளியீடு வரிசை 12

294.5

விலை : ரூபா 20-00

வெளியீடு :

சு. இராஜேந்திரக் குருக்கள்
அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்
நீர்வேலி.

அச்சிட்டோர் :
ஸ்ரீ மீனாட்சி அச்சகம்
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை



# முன்னுரை

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே ''

பிரணவ மூர்த்தியாகிய விநாயகப் பெருமான் தம்மை வழிபடும் அடியவர்களுக்குக் காட்சி கொடுத்துத் திருவருள் செய்யும் வண்ணம் கொண்டருளிய மூர்த்தங்கள் அளவிறந்தன. அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவத்தை விளக்குவன. அவைகளுட் சில தத்துவங்களை விளக்குமுகமாகவே இந்நூல் வெளிவருகின்றது.

எல்லாத் தத்துவங்களுமே (மூர்த்தங்கள்) எவராலும் விளங்குவதற்கரியன. சில ஆன்றோர்கள் முன் முப்பத்தாறு தத்துவங்களைப் பற்றியும், முப்பது, இருபத்து நான்கு, பதினாறு மூர்த்தங்களைப் பற்றியும் விளக்கி முன் பல பதிப்புக்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

சாதாரணமாக ஆகமம் - புராணம் - உபநிஷத்துக்கள் மூலமாக நாம் அறியமுடிபவை அறுபத்து நான்கு மூர்த்தங்களாகும் என்று கூறியிருக்கிறார்கள்.

விநாயகருக்கு இவ்வளவு மூர்த்தங்கள் எதற்கு என்று வினவுவோரும் உண்டு. அவைகள் எல்லாம் காலத்துக்குக் காலம் ஒவ்வொருவரையும் ஆட்கொள்ளவும், சிக்ஷை செய்யவும், தண்டிக்கவும் அமைந்தன என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
85719

பிரதம மகா சிருஷ்டியில் தொடங்கி அவாந்தர சிருஷ்டி வரை தோற்றங்கள் உண்டு.

விநாயகருடைய வடிவம் அருள்வடிவமாம் என்பதும்,

''ஒருமையா லுணருவோருணர் வினுக்குணர்வதாம்'' என்பதால் மெய்யன்போடு தியானிப்பவர்களுடைய அறிவுக்கறிவாயுள்ளவர் என்பதும்,

''எங்கணும் பிரிவறும் பெற்றியான்'' என்றமையால் சர்வவியாபகர் என்பதும்.

''அருமையான்'' என்றமையால் யாவராலும் அறியப்படாதவர் என்பதும்,

''எவரும் அடிதொழும் தன்மையான்'' என்பதால் எவராலும் வணங்கப்பெறும் இயல்பினர் என்பதும் காண்க.

வாதுளாகமத்தில் மகேசுவரருடைய திருக்கண்டத்தில் தோன்றினர் என்று கூறப்படுகிறது. கந்தபுராணம் - சுப்பிரபேதம் - காரணம் முதலியன கஜமுக சங்காரத்தின் பொருட்டுத் தோன்றினர் என்கின்றன. இன்னும் வெவ்வேறு காரணங்களும் உண்டு.

இதுமுன்னுக்குப் பின் முரணுமோ எனின் ஆகாது. முன் கூறியது பிரதம மகாசிருஷ்டி, பின்னது அவாந்தர சிருஷ்டி என்றும் அறிக

''முன்னைப் பழம்பொருட்டு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே''

என்று பாடினர் மணிவாசகர். புதுமைக்கும் புதுமையாயுள்ள பரம்பொருளே பிரணவப் பொருள் என்றும் பேசப்படும். (பிரணவம் = ப்ர + நவம்) ''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் சரண அற்புதமலர் தலைக்கணிவோமே'' என்று போற்றுவது சைவத்தமிழ் மரபாகும். வேத நெறி தழைத்தோங்கவும், மிகு சைவத்துறை விளங்கவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கணபதி தத்துவம்'' எனப் பெயரிய இச் சிறுநூல் துணை நிற்கும் என நம்புகிறேன். கணபதி அன்பர்கள் இதனைப் படித்துப் பயன் பெறுவார்களாக.

கந்தவேள் மலர்ப்பாதம்
தொழுதேத்தும் அடியான்
கு. இராஜேந்திரக் குரு

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,
நீர்வேலி.



# விநாயக புராணம்

திங்களணி சடைப்பெருமான் பூசை ஆற்றித்
திரிமதிலும் கடந்திடமுன் நின்றோன் யாவன்
தங்குகடற் புவி வரைப்பில் நெடியோனாதி
சகலருக்கும் ஊறு தவிர்க்கின்றோன் யாவன்
அங்கவன் மெய்ச் சரிதமொழி பெயர்ப்பவேண்டி
அவனடியே சரணாக அடுத்துளேற்கு
மங்கல சின்மய மதுரத் தமிழ்ச் செம்பாடல்
வாரி வள மடையுடைத்து வளருமன்றே.

— கச்சியப்ப முனிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தீப முகமும் திசையும்

குத்துவிளக்கின் தீபம் கிழக்கு முகமாக ஏற்றினால் துன்பங்கள் நீங்கி வசீகரம் உண்டாகும். மேற்கு முகமாக ஏற்றினால் கிரகதோஷம் பங்காளிகள் பகைபோகும். வடக்கு முகமாக ஏற்றினால் திரண்ட செல்வம் சேரும். கல்வித்தடை, சுபகாரியத் தடை போகும். தெற்கு முகமாக ஏற்றுவது மிகவும் பாபம். எமனுக்கு பிரீதி, துஷ்ட தேவதை ஓடிவரும்.

ஒருமுகம் ஏற்றினால் மத்திய பலன். இருமுகம் ஏற்றினால் குடும்ப ஒற்றுமை. மும்முகம் ஏற்றினால் புத்திர சுகம், கல்வி கேள்விகளில் விருத்தி. நான்கு முகம் ஏற்றினால் பசு, பால், பூமி விருத்தி. ஐந்து முகம் ஏற்றினால் சர்வபீடை நிவர்த்தி, ஐஸ்வர்ய லட்சுமி கடாட்சம் ஆகியன பெருகும்.

— சுகமுனிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை
வித்தக விநாயகா சரணம்



# கணபதி தத்துவம்

**காரியசித்தி மந்திரம்**

வக்ரதுண்ட மஹாகாய
சூர்யகோடி சமப்ரப
நிர்விக்னம் குருமேதேவ
ஸர்வகார்யேஷு ஸர்வதா.

கோடி சூரியப்ரகாசமுள்ள மகா கணபதியே ! எடுத்த காரியங்கள் தடையின்றி நிறைவேற எங்களுடனிருந்து அருள்பாலிக்கத் தங்களை வணங்குகிறோம்.

ஸ்வஸ்வாநந்த மகாதேவ
கணேசோ **ப்ரம்மணஸ்பதி** :
ஆனந்தஸ்யாதி தேவோயம்
ஸ்வாநந்தேச இதிர்யதே.

ஜேஷ்டராஜன் பிரம்மணுன்
**பிரம்மணஸ்பத** ஆநஸ்ருண்வன்
ஊதிபி : சீதசாதனம்.

இந்த ஸ்துதிகள் கணபதி தத்துவத்தை சிறப்பாக விளக்குகின்றன. கணபதிக்கு " **ப்ரம்மணஸ்பதி** " என்றும் ஓர் திவ்ய நாமம் உண்டு ஸ்வாநந்தம், ஆனந்தம் என்னும் இரு இன்ப நிலைகளுக்கும் அதிதேவதையாவார். அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்வாநந்தேசர் என்றும் நாமம் உண்டு. ஸத் - சித் - ஆனந்தம் இவை மூன்றும் பரப்ரும்மத்தின் ஸ்வரூப இலக்கணமாகும், ஒரு தத்துவத்திற்கு வெவ்வேறான மூன்று லட்சணங்கள் தேவையில்லை. ஏன் இந்த மூன்று லட்சணங்கள்? "ஆனந்தம்" என்பது தோன்றி மறையக்கூடியது. அது அழியாமல் இருக்க வேண்டுமென்பதற்காக "ஸத்" என்று ஓர் அடைமொழி சேர்க்கப்பட்டு அது காலத்தின் அளவு கடந்த ஏகாந்தமாக ஆக்கப்படுகிறது. இவ்வானந்தம் சாசுவதம் என்றாலும் அறிவிற்குப் பொருந்தாவிடில் சுவையற்றதாகி விடக்கூடும். அதற்காக இந்த நிலையில் "சித்" என்ற அடைமொழி ஏற்படுகின்றது.

சுய அனுபவத்துக்கு எப்போதும் பொருந்தக்கூடிய விஷயமான ஆனந்தம் இது. இந்த ஆனந்தமே ஆத்மாவின் சொரூபம். ஆத்மாவே பிரம்மம். ஆகவே எல்லா ஆன்மாக்களுக்கும் ஈசுவரர்களுக்கும் ஒரே ஆன்ம ஸ்வரூபமாக விளங்குவது கணேசபரப்ரம்மமே. மேற்கூடிய வடமொழி சுலோகத்தின் விளக்கம் இவையே,

## ஆனந்தமயம்

அன்ன ஸ்யாதி பதிர் விஷ்ணு
பிராண ஸ்யாதி பதிர் சிவஃ
மனஸ்து பராசக்தி
சூர்யோ விஞ்ஞான தேவதா
ஆனந்தமயா தேவஸ்து
ஸ்வாநந்தேச கஜாநநஃ

இந்த சுலோகம் கூறுவது :

விட்டுணு அன்னமய கோசத்திற்கு அதிபதி, சிவபெருமான் பிராணமய கோசத்திற்கு அதிபதி, பராசக்தியாகிய உமையோ மனோமய கோசத்திற்கு அதிபதி. சூரியன் விஞ்ஞானமய கோசத்திற்கு அதிபதி, கணபதி ஆனந்தமய கோசத்திற்கு அதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே கணபதி ஆனந்தத்தின் இருப்பிடம் என்பது தெளிவாகின்றது. பேரானந்தத்தை - அருளானந்தத்தை விரும்புகிறவர்கள் கணபதியை வழிபட வேண்டுமென்பதை இதன்மூலம் அறிந்துகொள்ளலாம். விநாயகரின் இருப்பிடமே "ஆனந்த பவனம்" எனப்படும்.

ஜீவ - பிரம்ம ஐக்கியத்தை உணர்த்தும் வடிவம்தான் கணபதியின் வடிவம். கழுத்துவரை மனிதரூபமும், மேலே யானை முகமும் கொண்டிருக்கும் கணபதி, மனித வடிவத்தில் ஜீவாத்மாவையும் கஜரூபத்தில் பிரம்மஸ்வரூபத்தையும் இரண்டும் இணைந்த அற்புத நிலையில் காட்சியளிக்கின்றார். ஆகவே கணபதியின் திவ்ய வடிவம் ஜீவ - ப்ரும்ம ஐக்கியத்தை மறைமுகமாகக் காட்டுகின்றது.

கணேச அவதாரங்களைப் பற்றி பார்க்கவ புராணம், முத்கல புராணம், பிரம்ம புராணம், பிரம்மாண்ட புராணம், ஆங்கிரஸ புராணம் ஆகிய நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. உலகில் விக்கினங்கள் எல்லாம் தோன்றக் காரணமாயிருப்பவரும், அந்த விக்கினங்கள் நீங்க அருள்புரிபவரும் விநாயகர்தான். அதனால்தான் இப்பெருமான் விக்கின விநாயகர், விக்கினேஸ்வரர், விக்கினராஜா, சித்தி விநாயகர் என்றெல்லாம் துதிக்கப்படுகின்றார்.

அரண்மனை வாயிலில் யானையைக் கட்டியிருப்பார்கள். அரனுடைய மனையாகிய கோவிலிலேகூடத் திருவாசலில் ஒரு யானை இருக்கிறது. அரண்மனை வாசல் யானை மதம் கொள்ளும். துதிக்கையாகிய ஒரே கையை உடையது. அரன் கோவிலில் உள்ள யானை மதத்தை அழிப்பது. ஐந்து கைகளை உடையது. அந்த யானை கடவுள் வரிசையைச் சேர்ந்தது. கணபதியாகிய ஆனைமுகக் கடவுளே, விக்கின விநாயகனே அந்த யானை.

இந்துக்கள் எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும் விநாயகரை வணங்கிவிட்டே செயலிற் புகுவது வழக்கம். நூலைப் பாடுபவர்களும், இந்துக்களாக இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் கணபதிக்கு ஒருதுதி பாடிவிட்டுப் பின்புதான் நூலினைப் பாடுவார்கள். வேறு வகையாகவும் விநாயகருடைய துதிகளாகப் பல பாடல்கள் தமிழில் இருக்கின்றன. அவை புலவர்களின் கற்பனைக்கும் கவியாற்றலுக்கும் ஏற்றபடி வெவ்வேறு சுவையுடன் அமைந்திருக்கும்.

ஒரு புலவர் விநாயகராகிய யானையைப் பாடித் துதிக்கிருர். அவரை நேரே துதிக்காமல் சித்திவிநாயகக் கடவுளை வணங்கிப் பாவங்களைப் போக்கிக்கொள்வோம் என்று படர்க்கையில் வைத்துப் பாடுகின்ருர்.

சித்திவிநாயகரைச் ''சித்திவேழம்'' என்று பாடுகின்ருர். விநாயக்கடவுளின் முகம் மாத்திரமே யானை முகமானுலும் உடம்புக்குள் சிறந்ததாகிய முகத்தைக்கொண்டு அவரை யானையென்று கூறுவது வழக்கமாகிவிட்டது. புலவர் விநாயகரை யானையென்று மட்டும் சொல்லிவிடவில்லை. யானை கட்டும் கூடம், கட்டும் தறி, சங்கிலி, அதற்கு இடும் கவளம் ஆகியவற்ருேடு கொண்டுவந்து நிறுத்துகிருர்.

இந்த யானை உலகத்தில் உள்ள யானையைப்போல் மனிதன் கட்டிய யானைப் பந்தியில் வளர்வது அன்று. இது மிகப் பெரிய யானைதான். ஆனுலும் மிகச் சிறிய இடத்திலும் நுழைந்துகொள்ளும். இதற்குப் பெரிய கட்டிடம் கட்ட வேண்டும் என்பது இல்லை. இருக்கின்ற இடத்தைக் கொடுத்தாலே போதும். அன்பர்கள் தம்மிடம் உள்ள சிறிய இடத்தில் இந்த யானையைக் கட்டிப் போடுகிருர்களாம். அந்த இடம் எது தெரியுமா? அன்பினுலே நினைக்கும் உள்ளம் தான். உள்ளம் சிறிதா, பெரிதா? அது நுட்பமாக இருப்பதால் சிறியதென்றே சொல்லவேண்டும். அணு என்று நூல்கள் கூறுகின்றன. ஆனுல் அது கொள்ளுகின்ற ஆசையைப் பார்த்தால் அதற்குச் சமமான விரிவையுடை பொருள் என்றுமே இல்லையென்றே தோன்றுகின்றது.

உள்ளமாகிய கூடத்தில் அன்பர்கள் சித்திவேழத்தை வளர்க்கின்ருர்கள். அதனைக் கட்டுவதற்காக விடாமுயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகிய முளையை அடிக்கிறார்கள். அந்த முளையிலே கட்ட சங்கிலி வேண்டும். யானை விரும்பும் சங்கிலி ஒன்று இருக்கிறது. அது அன்பாகிய சங்கிலி. அன்பு இருந்தால்தான் இந்தச் சித்திவேழத்தைக் கட்டலாம். உள்ளமாகிய கூடத்தில் ஊக்கமாகிய முளையை நட்டு அன்பென்னும் சங்கிலியினால் சித்திவேழத்தைக் கட்டிப்போடுகிறார்கள் அன்பர்கள்.

அப்படிக் கட்டிப்போடும் சித்திவேழத்திற்கு யார் தீனி போடுவது? விநாயகருக்குத் "தொப்பையப்பன்" என்றும் ஒரு பெயர். எதனை நிவேதனம் செய்தாலும் வாரிச்சுருட்டி வயிற்றுக்குள் திணிக்கும் இயல்புடையவர். அவருக்கு உணவு போடக் கட்டுமா? அப்படி இந்த வேழத்தைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை. அதற்குக் கவளம் கவளமாகக் கொடுக்க எதையும் தேடவேண்டியதில்லை, இருக்கின்றதையே கொடுக்கலாம். நம்மிடம் மிகுதியாக இருக்கும் பொருளைக் கொடுத்தாலே மகிழ்ந்து உண்ணும் இந்தயானை. நம்மிடம் இருக்கும் அந்தப் பொருளால் நமக்கு இன்பம் இல்லை, துன்பம்தான். உண்மையைச் சொல்லப் போனால் அந்தப் பொருள் நம்மிடம் இருப்பதனால்தான் நமக்கு எல்லா வகையான துன்பங்களும் வந்துசேருகின்றன. மேலும் பிறந்து பிறந்து சாவதற்குக் காரணமே அந்தப் பொருள் தான். அதற்குத்தான் "பசுபோதம்" என்று பெயர். நாம் அறியாமல் நம்மிடமிருந்து பல தீவினைகளைச் செய்யச் செய்து அலைக்கழிக்கிறது. இறைவனை உணரமாட்டாமல் இந்த உலக வாழ்வே நித்தியம் என்று நினைக்கச் செய்கிறது.

செம்பிலே களிம்பு இருப்பதுபோல நம்மிடம் அது ஒட்டிக்கொண்டு இருக்கிறது. இது நீங்கினால் நமக்கு இன்பம் உண்டாகும். இந்தக் கள்ளவினைப் பசுபோதத்தையே சித்திவேழத்துக்குக் கவளமாக இட்டுவிட்டால் இரண்டு நன்மைகள் உண்டாகும். ஒன்று நமக்குத் துன்பம்தரும் பொருள் நம்மைவிட்டுப் போகிறது, மற்றது சித்திவேழத்துக்குக் கவளம் கிடைக்கிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்துவது போன்ற செய்கை இது.

•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வேடிக்கையாக அல்லவா இருக்கிறது. அழுகற் பழம் ஐயருக்கு என்பது போல நமக்கு வேண்டாததை விநாயகருக்குக் கொடுப்பதாவது! அதனாலே அவருக்குக் கோபம் உண்டாகாதா? கவளம் இடும்போது கல்லை இட்டால் யானை நெடுநாள் வைத்திருந்து இட்டவனைச் சாடும் என்பார்கள். நமக்கு வேண்டாததை - அழுக்கானதை வேழம் ஏற்றுக்கொள்ளுமா?

இவ்விதம் பல கேள்விகள் எழ இடமுண்டு. ஆனால் உண்மையாக நமக்குத் தீங்கைச் செய்கின்ற கள்ளவினைக் காரணமாகிய "பசுபோதத்தை" கவளமாக்கிவிட்டால் இந்தச் சித்திவேழமாகிய யானை மகிழ்ச்சியோடு உண்ணும். இவனுக்கென்று வேறு ஒன்றும் சொந்தமாக இல்லை பல காலமாக இவனிடம் இருப்பது இந்த அழுக்கு மூட்டை தான், அதனைவிடாமல் பற்றிக்கொண்டிருந்தான், அதை அந்தப்பற்றை நீக்கிக் கொடுத்துவிட்டானே என்று மகிழ்ச்சி யோடு உண்ணும்.

உணவை மிகுதியாக உண்ணும் யானைக்குக் கொழுப்பு அதிகமாக மதம் உண்டாகும். அந்தமதம் பிறருக்குத் தீமை யைச் செய்யும். இந்தத் தெய்வயானையோ நாம் கொடுக் கும் பசுபோதக் கவளத்தை உண்டு சந்தோஷம் அடை யும். அதனால் மதம் வெள்ளம்போல் உண்டாகும். அது கருணையெனும் மதம், கருணையில் நமக்கு நன்மையேயன்றி தீமை இல்லை.

நாம் கொடுப்பது நமக்குத் தீமையைச் செய்யும் அழுக் குப் பண்டம். அதனைப் பெற்றுக்கொள்வதோடு மிகவும் உவகையை அடைந்து அந்த யானை தருவதோ, நமக்கு எல்லா நன்மைகளையும் அளிக்கும் கருணை. இப்படியும் நடக் குமா?

இதில் வியப்பு ஒன்றுமில்லை. தோட்டத்தில் உயர்ந்த ஜாதி ரோஜாச் செடிகளுக்கு நாற்றமுள்ள எருவைப்போட அதனை ஏற்றுக்கொண்டு அச்செடி மிகவும் நறுமணமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான மலரைத் தருகின்றது. அதனைப் பார்த்து மகிழ்கிறோம். ஓரறிவுடைய செடிக்கு நமக்குப் பயன்படாத நாற்ற முள்ள எருவைப் போட அது நேர்மாறான மணமுள்ள மலரைத் தருகிறது. அப்படியானால் ஞானமயமான கணபதி நாம் அளிக்கும் பசுபோதத்தைப் பெற்று நமக்குக் கருணையைத் தருவதில் வியப்பு ஒன்றுமில்லையே ?

உள்ளமெனும் கூடத்துள் ஊக்கமெனும்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி
இடைப்படுத்தித் *தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணைஎன்னும்
வெள்ளமதம் பொழி சித்திவேழத்தை
நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்.

— பரஞ்சோதி முனிவர்



* தறுகட்பாசக் கள்ளவினைப் பசுபோதம் — கொடுமையை உடைய பாசமாகிய கள்ளத் தன்மையை உடைய வினைக்குக் காரணமாகிய ஜீவ்போதம் - சிற்றறிவு அல்லது அறியாமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# பிள்ளையார் சுழி

உலகத்தில் முதன் முதலில் எழுத்துக்களைக் கண்டு பிடித்து எழுத ஆரம்பித்தவர் விநாயகரே. வேதவியாசர் மஹா பாரதத்தை எடுத்துரைத்தபோது அந்தக் காவியம் அழியாது அனைவரும் அதைப் படித்துப் பேறுபெறும் பொருட்டு விநாயகர் தனது தந்தங்களில் ஒன்றை ஒடித்து அதையே எழுத்தாணியாகக்கொண்டு எழுதி வைத்தார். எழுத்தைக் கண்டுபிடித்த கருணைக் கணபதிக்கு நம் நன்றியறிதலைத் தெரிவிக்கும் பொருட்டு நாம் எழுதத் தொடங்கு முன் ''பிள்ளையார் சுழி'' போடுகின்றோம். இதனாலேயே இவரை முதல்தெய்வம் என்றும் போற்றுகிறோம். உலகின் முதல் தெய்வமின்றி முதல் எழுத்தாளரும் விநாயகரே.

ஆலயத்தில் கணபதியின் சந்நிதியை அடைந்ததும் நாம் நெற்றியில் குட்டிக்கொள்கிறோம், தோப்புக்கரணம் போடுகிறோம். மூலாதாரத்தில் குண்டலினிசக்தி பாம்பு போன்று கிடப்பதாகக் கூறப்படுகிறது. கவிழ்ந்த கூம்பு அது. முக்கோணத்தில் சுருண்டு கிடக்கும் வடிவத்திற்கு மிருக இனத்தில் நெருங்கியொத்துக் காணும் ரூபம் யானையேயாகும். வளைந்து சுருண்ட துதிக்கை ''குண்டலினியை'' நினைவூட்டுகிறது. ஆதிபரம்பொருள் குண்டலியினில் ப்ரணவாகாரமாக நாலிதழ்த் தாமரையில் மூலாதாரத்திலேதான் இருக்கிறது. இச்சக்தியை முதலில் வழிபட மற்றவைகள் தாமே இயங்கும். ஆகவே நமது மூலாதாரத்தில் உள்ளவர் கணபதியே என்பதை ஐயன்முன்பாக எடுத்துக்காட்டுவதே இந்த ரகசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.

௨



# வித்தக விநாயகன்

## ஔவை :

தமிழ் தளரா நாவும், அன்பு தளரா உள்ளமும் உடைய ஔவைப்பிராட்டி எந்தக் காரியம் செய்தாலும் செய்யா விட்டாலும் விநாயகரைப் பூசித்து வழிபடுவதை மறக்க மாட்டாள்.

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் — கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா."

என்று தோத்தரித்து விநாயகப் பெருமானை வேண்டித் தமிழ்ப் புலமை பெற்றவள் அல்லவா ?

இவ்விதமாகப் பூசை செய்யும் ஔவைப்பாட்டி தன்னையே மறந்து விநாயகப் பெருமானுடைய திருவருள் இன்ப உணர்ச்சியிலே மிதந்தாள். அவளது உள்ளத்திலே இன்ப அலைகள் மோதின. அப்போது ஒரு பாட்டு எழுந்தது. கவித்திறமை படைத்தவர்கள் உள்ளம் உணர்ச்சி வசப்படும்போதுதெல்லாம் கவி பிறக்கும். நாம் துயரத்தில் ஆழும்போது புலம்பலும், மகிழ்ச்சியில் பூரிக்கும்போது சந்தோஷ ஆரவாரமும் எழுகின்றதுபோல, கருவிலே அருளும் திருவும் உடைய கவிஞர்களிடம் கவி எழும், அப்படி விநாயகபூசை செய்யும்போது ஏற்பட்ட அவசரம் காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக "ஏன் இத்தனை விரைவு" என்று அசரீரி வாக்குக் கேட்கவும் "அமைதியாகப் பூசை செய், உன் விருப்பம் நிறைவேறும்" என்று காதில் விழுந்தது. சுற்றுமுற்றும் பார்த்து ஒருவரையும் காணுமற்போக, விநாயகப் பெருமானே இவ்வாறு அருள் செய்தார் என்று உணர்ந்து அமைதியாகப் பூசனையைச் செய்தாள்.

பூசை நிறைவேறியும் பாட்டிக்குத் திருப்தி உண்டாகவில்லை. நம் விருப்பத்தை நிறைவேற்றும் பெருந் துணையாக விநாயகப் பெருமான் இருப்பதை மறந்து அவசரப்பட்டேனே! என்று உருகினுள். அப்பெருமான் திருவருளால் தனக்குக் கிடைத்த நலன்களை எல்லாம் எண்ணிப் பார்த்தாள், அரிய தமிழ்ப் புலமையும், பெரும் புகழ் நிலைமையும் அவன் கொடுத்தான். குரு வடிவாக வந்து உவட்டா உபதேசம் புகட்டினுன். தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டினுன். ஐம்புலன்களை அடக்கும் உபாயம் அருளினுன். கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்தான். இருவினை தம்மை அறுத்து இருள்கடிந்து தவம் பலிக்கச் செய்தான். யோகம் நிறைவுற அருளினுன்.

என்னை அறிவித்து எனக்கருள் செய்து முன்னை வினையின் முதலைக் களைந்தான். அதுவுமல்லாமல் வாக்கும் மனமும் இல்லா மனேலயம் தேக்கியே என் சிந்தை தெளிவித்து' அருள்தரும் ஆனந்தத்தில் அழுத்தி அல்லல் களைந்தே அருள் வழிகாட்டி அஞ்சக்கரத்தின் அரும் பொருள் தன்னை நெஞ்சில் நிறுத்தினுன். இவ்வாறெல்லாம் தத்துவ நிலையைத் தந்து எனை ஆட்கொண்ட வித்தக விநாயகனை மறக்கலாமா? புலமை பெறுவது எளிது, அருள் இன்பம் பெறுவது அரிது. இவைகளை அருளிய பெருமானுடைய கருணையை எண்ணி எண்ணிக் கண்ணீர் பெருக புளகம் போர்ப்ப அமர்ந்திருந்த பாட்டிக்கு கைலைமலை செல்லும் நினைவு மறந்தது. நண்பனுகிய சேரமானைப் பற்றிய சிந்தனை ஒழிந்தது. தன்னையே மறந்தாள். விநாயகப் பெருமானுடைய திருவருள் இன்ப உணர்ச்சியிலே திளைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA,



உள்ளத்திலே திருவருள் இன்ப உணர்ச்சி அலைமோதும் போது அருள்மயமான பாட்டுப் பிறந்தது. அந்தப் பாட்டில்தான் குரு வடிவாகி உபதேசித்தமை, ஞானத் தெளிவு ஏற்பட்டமை, பஞ்ச புலன்களை அடக்கியமை, கருவிகள் ஒடுங்கியமை இருவினை நீங்கியமை, யோகம் நிறைவுற்றமை, முன் வினை நீங்கிக் கைலை சேர்ந்தமை ஆகிய அனைத்தும் அருளிச் செய்யப்பட்டுள்ளன.

அப்போது உதயமான கவிதையே "விநாயகர் அகவல்" என்ற அழகிய திருப்பாட்டு. எழுபத்திரண்டு அடிகளை உடையது. அப்பாட்டிலே ஒளவைப்பாட்டி முதன் முதலில் விநாயகப் பெருமானுடைய திருவடியை எண்ணி, அதன்கண் பல இசைபாடும் சிலம்பையும் தியானித்து அவன் திருவுருவம் முழுவதையும் சொல்லால் அழகுக்கோலம் செய்கிருள். அந்தத் திருவருள் பொழியும் கவிதையிலேதான்,

* "சீதக் களபச் செந்தாமரைப்பூம்
பாதச் சிலம்பு பல இசைபாட ...

என்று இவ்வாறு தொடங்கி தான் விநாயகன் அருளாலே பெற்ற பேற்றையும் சொல்லி, கடைசியில் அப்பெருமானைச் சரண்புகுகின்ருள் தமிழ்ப்பாட்டி,

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே "

★

* "விநாயகர் அகவல்" என்னும் பாடல் சிவநெறிப்புரவலர் சிவதர்ம வள்ளல், உயர்திரு. க. கனகராசா ஜே. பி. அவர்களால் அச்சிடப்பட்டு இலவசமாக வழங்கப்படுகிறது. அதன் காரணமாகவும் இடம் போதாமையினுலும் முழுவதும் எழுதப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி

இக் கலியுகத்தில் நாம் புலனடக்கும் ஆற்றல் அற்றவராய், தர்மநெறியை மீறி, அதர்ம சிந்தையுடன் வாழ்கின்றோம். படாடோபமான வெளிவேஷம் வாய்ச்சாலம் இவைகளையே காண்கிறோம்.

நம் பாவங்களைப் போக்கி, நம் கலிதீர, மோக்ஷம் அடைய நாம் என்ன செய்ய வேண்டும் ? **பக்தி செய்ய வேண்டும்.**

'' அல்லல் போம் வல்வினை போம்
அன்னை வயிற்றில் பிறந்த தொல்லைபோம்
போகாத் துயர் போம் — நல்ல
குணமதிக மாமதுரைக் கோபுரத்தில் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால் ''

மதுரைக் கோயிலுக்குள் சென்று வழிபடத் தவறினலும் அக்கோயிற் கோபுரத்தில் வீற்றிருக்கும் கணபதியைக் கை கூப்பித் தொழுதால் போதும். அன்னை வயிற்றில் பிறந்து இத்தரையில் உழன்று படும் தொல்லைகளும் துயரங்களும் ஒரு கணப்பொழுதில் நீங்கிவிடும்.

— புலவர் பெருமான்

கணேசன் என்கிற விக்கினங்களைப் போக்கிடும் விநாயகக் கடவுளை மந்திர பூர்வமாகவும், ஜபம் தபம், உபவாசம், விரதம், பஜனை அன்பு வாயிலாகவும் வழிபடலாம்.

யானைமுகம் என்பது ஓம் என்ற பிரணவ வடிவமாகும். பஞ்ச பூதக்களுக்கறிகுறியாக ஐந்து கரமும், அண்டகோடிகளை அடக்கியிருப்பதற்கு அடையாளமாக உருண்டு, திரண்டு செறிந்த தொந்தியும் வாய்த்து இன்னும் பல பரமார்த்த தத்துவங்கள் வாய்ந்த உருவமாய் நமக்கு அருளும் விநாயகருக்கு முன்னேன் எனவும் நாமமுண்டு.

•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரின் அவதார மூர்த்தங்களைப் பிரத்தியக்ஷப் படுத்திச் சித்திகள் அடைவதற்குச் சில மந்திர மார்க்கங்கள் உள.

பரிசுத்தமான இடத்தில் அவரை ஸ்தூலமாகவோ, சூக்ஷ்மமாகவோ பிரதிஷ்டை செய்து சில நிபந்தனைகளுக்குட்பட்டு அந்த மந்திரங்களை ஒழுங்காக உச்சரித்து வழிபடலாம்.

உபவாசம், விரதம் போன்ற முறைகளினாலும் விநாயகரை ஆராதிக்கலாம்' விரதங்கள் அனுஷ்டிப்பதற்குச் சில புண்ணிய தினங்களும் திதிகளோடு கூடிய காலங்களும் உண்டு. அந்தக் குறிப்பிட்ட காலங்களில் உபவாசமிருந்து விரதத்திற்கு அதிஷ்டானமாகிய விக்கினேஸ்வரரின் தத்துவங்களைக் கூறும் புராணங்கள், தோத்திரங்கள், மந்திரங்கள், ஜபங்கள் முதலியவைகளை ஓதி அவருடைய திவ்ய கருணைச் செயல்களைச் சிந்தனையில் நிறுத்தி, அவரின் அருள் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவேண்டும்.

❋

# கணநாதன்

KOHA JPL

உலகமனைத்தையும் பல்வேறு கணங்கள் காத்து, கட்டுப்பாட்டோடு இயங்க வைக்கின்றன. அந்தக் கணங்களைச் சிறிதும் பிசகாமல், கோணாமல் இயக்கிவிடும் அதி அற்புத சக்திதான் கணபதி என்கிற கணநாதன்.

கணபதி, விநாயகர், பிள்ளையார், விக்கினேசுவரன் என்றெல்லாம் மனதில் தோன்றியதும், சொன்னதும் எல்லோரும் உடனே வழிபாடு முறையாகக் கொள்வதும் தோப்புக் கரணம் போடுவதும், தலையில் குட்டிக் கொள்வதுமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோர்ப்பிக்கரணம்

*தோர்ப்பி என்பது வடமொழி. அது தோப்புக்கரணம் என்று தமிழ் வழக்காய்விட்டது. தோர்ப்பிக்கரணம் என்றால் என்ன ? பிள்ளையாருக்கு மட்டும் ஏன் தோப்புக்கரணம் போட வேண்டும் ?

தேவகணங்களும் தேவர்களும் விநாயகருக்கு உட்பட்டவர்கள்தான். மகாவிஷ்ணுவும் பரமேஸ்வரனும் ஏன் நமது ஞானத்தந்தை, சிவகுரு, தேவகுரு, குறுமுனி, குரு என்று பலவிதமாகக் குரு ஸ்தானத்தில் போற்றப்படும் முருகனுங் கூட ஒருமுறை கணபதியை வேண்டி அவனருளாலே காரியங் கைகூடப் பெற்றனர். பெற்ற தாயாருமே அவரின் உதவியை நாடினார் என்றால் கணங்களுக்கு எல்லாம் அதிபதியான கணபதியை மறவாமல் தினம் துதிப்போமாக.

## மகாவிஷ்ணு :

ஒருசமயம் மகாவிஷ்ணு சிவத்தைத் தரிசிக்கக் கைலாயம் சென்றசமயம் கோபுரவாசலில் தரிசனம் கொடுத்தும், அருள் செய்தும், திருவிளையாடல்கள் புரிந்துகொண்டிருக்கும் கணபதியிடம் தனது சக்கராயுதத்தைக் கொடுத்தார். விளையாட்டினூடே அச் சக்கராயுதத்தை விநாயகப்பெருமான் வாயினுட் போட்டுக்கொண்டு திருவாயை மூடிக்கொண்டு இருந்துவிட்டார். விஷ்ணுவோ தவித்துப்போனார். கெஞ்சி, மன்றாடி, துதித்துப் புகழ்ந்து சக்கராயுதத்தைத் தருமாறு கேட்டார், எந்த விதமான பயனும் இல்லாததால் காதுகளைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தும் எழுந்தும் விளை

---

* வடமொழியில் ''தோர்ப்பி'' என்றால் கைகள், ''கரணம்'' என்றால் காதுகள் என்றும் அர்த்தமாவதால் கைகளால் காதுகளைப் பிடித்து வணங்கும் முறை தோர்ப்பிக்கரணம் என்று வழங்கலாயிற்று.

ஞானபூமி - செப். 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்டுக் காட்ட, அதனைப் பார்த்த கணபதி வாய்விட்டுச் சிரிக்கவும், சக்கரம் வெளியேவந்து விழுந்துவிட்டது. விட்டுணும் நிம்மதியடைந்தார்.

தோர்ப்பி என்பது கைகள் கரணம் என்பது காதுகள் என்றும் அர்த்தமாவதால் கைகளால் காதுகளைப் பிடித்து, கீழே தாழ்ந்தும் எழுந்தும் வணங்குவதால் தோர்ப்பிக்கரணம் என்ற தோப்புக்கரணம் வழங்கலாயிற்று.

நமக்கு வேண்டியதை விநாயகரிடம் வேண்டும்போது தோப்புக்கரணம் போட்டு குட்டிக்கொள்வது வழக்கமாகிவிட்டது. அதனை முதன்முறையாக வழிபாடு முறையாகத் தொடக்கியவர் மகாவிஷ்ணுவே. பின்பே அகத்திய மகாமுனிவர் கமண்டலம் கவிழ்த்துக் காவிரி பெருக்கெடுத்த சமயம் பிரபல்யமாக்கிவிட்டார்.



# விக்னேசுவரன்

விக்னங்களை விலக்குவதால் (விக்ன + ஈஸ்வரன்) விக்கினேஸ்வரன் என்கிற திருநாமம் விநாயகருக்கு உண்டு. எந்தக் காரியத்தைத் தொடங்கினலும் அது சற்றும் இடைஞ்சலின்றி வெற்றிபெற விக்னேசுவரனை முதலில் வணங்கித் துதித்துவிட்டே தொடங்கவேண்டும்.

சிவபிரான் திரிபுர அசுரர்களைச் சங்கரிக்க ரதத்தில் புறப்பட்டுச் சிறிதுதூரம் செல்ல ரதத்தின் அச்சாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழன்று சக்கரம் வெளியேறிவிட்டது. "தடை ஏற்பட்டதே" என்று ஆலோசித்தசமயம், விக்னத்தை நீக்கும் சக்தியுடைய விக்னேசுவரனின் நினைவுவர, இப்படியொரு பிள்ளையைப் பெற்ற உரிமையினுல் நாம் அந்தச் சக்தியின் சிந்தனையில் லாமல் (கணங்களுக்கு அதிபதி) கணநாதனை வேண்டாமல் புறப்பட்டோமே, யாராக இருந்தாலும் அவரவர்க்குரிய ஸ்தானத்திற்கான மரியாதையைக் கொடுக்காமல் வந் தோமோ என்று அவ்விடத்திலேயே விக்னேசுவரனை நினைக்க இடையூறு அகன்று ரதத்தின் சக்கரம் அச்சாணி பொருத்தப்பட்டு அசுரர்களைச் சங்கரிக்க ஈஸ்வரன் புறப் பட்டு யுத்தம் செய்து வெற்றிபெற்று "திரிபுராந்தகர்" என்று நாமமும் பெற்ருர்.

அந்த இடம் அச்சிறுப்பாக்கம் என்று இப்போதும் விக் கினேஸ்வர ஸ்தலமாக விளங்குகின்றது.

சர்வ சக்தியாகிய அம்பிகையே ஒருசமயம் விக்னேசுவர உதவியை நாடினுர். சக்தி சேனையுடன் பண்டாசுரனேடு யுத்தம் செய்யக் கிளம்பிய அன்னை அக்கினிக்கோட்டையை எழுப்பி அதனுள் முகாமிட்டிருந்தபோது சேனுதிபதி விசுக் கிரன் விக்னயந்திரத்தை அக்கோட்டைக்குள் எறிய, தேவ சேனைகள் மனமாற்றத்தையும் மயங்கும் சக்தியையும் கொண்ட விக்ன யந்திரத்தால் மயங்க, ஞானஸ்வரூபிணி யான அம்பிகை காமேஸ்வரி, காமேஸ்வரன் என்ற திரு நாமம் கொண்ட சிவபிரானை கண்ணெடு கண்நோக்கி முகம் மலர்ந்த நேரத்தில் விக்னேசுவரரை உற்பவித்தாள். எல்லாமே பிரசன்னமாக, ஜோதிமயமாக, ஆனந்தமயமாக இருப்பதற்காகவே உத்பவிக்கப்பட்ட விக்ன சக்தியானது "காமேஸ்வர முகாலோக கல்பித ஸ்ரீ கணேஸ்வரா" என் றும் கூறப்பட்டுள்ளது. விக்னம் தீர்க்கவென்றே உற்பவித்த விக்னேசுவரரைத் தியானிக்க, அக்கினிக் கோட்டையில் கிடந்த விக்ன யந்திரத்தைத் தும்பிக்கையால் எடுத்து நாசம் செய்ய சேனுவீரர்களெல்லாம் உறக்கத்திலிருந்து எழுந்தவர்கள் போல் எழுந்து வீராவேசத்துடன் அசுரர் களை வீழ்த்தி அம்பிகை வெற்றிமாலை சூடும்படி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்னேசுவர சக்தியே சக்தி சேனையை புத்துணர்ச்சி பெறச் செய்தது.

அந்த மாபெரும் சக்தியை,

சுக்லாம்பரத — வெள்ளை வஸ்திரம் அணிந்துகொண்டிருப்பவர்.

விஷ்ணும் — எங்கும் வியாபித்திருக்கும் பரம்பொருள்.

சசிவர்ணம் — நிலா போன்ற குளிர்மை மிக்கவர்.

சதுர்புஜ — நான்குவித சக்திகளை நாலாபுறமும் செலுத்திடும் நான்கு சக்தி கைகளை உடையவர்.

பிரசன்னவதனம் — என்றும் பிரகாசமான, சிரித்தமுகம் கொண்டவர், ஆனந்தமான அருட்காட்சியை அளிப்பவர். இப்படிப்பட்டவரை,

த்யாயேத் — தியானிக்க வேண்டும். எதற்காகத் தியானிக்க வேண்டும்?

ஸ்ர்வவிக்ன உபசாந்தயே — எல்லா விக்னங்களும், தடைகளும், இடையூறுகளும், அடங்கி மறைந்து போவதற்காகத் தியானிக்க வேண்டும்.

## முருகன் :

தாய் தந்தையர்களுக்கு அசுரர்களை வீழ்த்த உதவி செய்து விக்னந் தீர்த்தபெருமான் தம்பியாகும் முருகனுக்கு சிருங்காரத்திற்கு உதவி - தன்னையே நினைந்து உருகிக்கொண்டிருக்கும் வள்ளியை முருகன் நேராகவே சென்று திருமணம் செய்திருக்கலாம். ஊடல், கூடல் என்பவற்றையும் எந்தவொரு காரியத்திற்கும் அண்ணன் விநாயகரை, விக்னேசுவரனை வழிபடுதல் அவசியம் என்பதையும் உலகுக்குத் தெரியப்படுத்தவும் வேடனாக, விருத்தனாக வந்து நாடகமாடவும் திருவிளையாட்டுகள் செய்தும் ஊடல் செய்ய அப்போது விக்னேசுவரன் மாபெரும் மதயானை உருவில் வள்ளியைத் துரத்த அதன் காரணமாக பயமுற்ற வள்ளி விருத்தனான முருகனை ஆரத்தழுவி முருகனைச் சரணடையச் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் அல்லாது எந்தச் சுபகாரியங்கள் ஆரம்பிக்கு முன்பு விக்னேசுவரனை வழிபடுதல் அவசியம் என்பதற்கு வள்ளி திருமணம் மாத்திரமல்ல மற்றையவைகளும் சான்ருகும்.

அருணகிரிநாதமுனிவர் பெருமான் பாடியருளிய திருப்புகழுக்கு முதன்முதலாக பாடியுள்ள விக்னேஸ்வர துதியில் திரிபுரசம்ஹாரம், வள்ளி திருமணம் ஆகியவற்றில் மகா கணபதியின் பெருமையை,

முப்புரமெரி செய்த அச்சிவனுறை ரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரமணி படும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே !

என்று விதந்தோதுகின்ருர்.

## ராமர் :

சர்வவிக்ன நாசம் செய்திடும் கணநாதனுகிய விக்னேசுவரனை மானிட அவதாரமாம் ராமாவதாரத்தில் மகா விஷ்ணு மிகவும் சிரத்தையுடன் பூஜிக்கின்ருர். சேதுபந்தனம் நிர்விக்னமாக நடக்கவேண்டும் என்பதற்காக உப்பூரில் விநாயக பூசை செய்தார். மற்றவர்களுக்கெல்லாம் ஆனந்தமளிக்கும் பிள்ளையார் தமக்கென்று ஒரு கூரைகூட இல்லாமல் ராமபிரான் வெய்யிலென்றும் மழையென்றும் பனியென்றும் காற்றென்றும் பாராமல் தந்தை சொல் அடங்கிவாழும் நற்குணத்தைப் பாராட்டுவதற்காக வெயிலுகந்த விநாயகர் என்கிற நாமத்தோடு திருவருள்பாலித்துக்கொண்டிருக்கிருர்.

## சூரியன் :

எருக்கம் பூவினுல் பூசிப்பதும் விநாயகருக்கு மிகப் பிரீதியாகும். சூரியனின் கிரணங்களால் பேணிப் பாதுகாக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எருக்கம் பூக்களைக் (அர்க்கன் பூக்கள் என்பதே மருவி எருக்கம் பூவர்னது) கொண்டு சூரியனை பூசிக்கின்றான்.

## சந்திரன் :

சந்திரன் செய்த பரிகாசத்தினால் கோபமுற்ற விநாயகர் சபிக்க அதனால் துன்பமடைந்த சந்திரன், தேவர்கள் எல்லோரும் கணபதியைப் பூசனைசெய், சாபம் தீரும் என்று உபாயம் கூற, சந்திரனும் முறைப்படி பூசைசெய்ய பெரிய முறம்போன்ற காதுகளை உடையவரான (சூர்ப்பகர்ணம்) கணேசபகவான் சந்திரன் முன் பிரசன்னமாகி மனமார மன்னிப்புக் கேட்டதால் மன்னித்துவிட்டார்.

சந்திரன் விநாயகரைத் துதித்ததாலும் கணபதியின் தலைமீது தன் சிறப்புடன் அமர்ந்ததாலும் பிள்ளையாருக்கு பாலசந்திரன் (பாலம் என்றால் தலை) என்ற திருநாமமும் வழங்கலாயிற்று.

## கண்ணன் :

மனம் கலங்கியிருந்த கண்ணனை நாரதமுனிவர் விநாயக பூசை செய்து நற்பலன் பெறும்படி உபதேசிக்க அவ்விதமே கண்ணனும் சுக்லபட்ச சதுர்த்தியன்றும் கிருஷ்ண பட்ச சதுர்த்தியன்றும் பூசைசெய்ய கண்ணனுக்கு விநாயகர் தரிசனம் கொடுத்து அவரது அபவாதங்களை நீக்கி அருள் செய்தார்.

## அகத்திய மகாமுனிவர் :

வடகோடி தாழ்ந்தும் தென்கோடி உயர்ந்தும் நின்ற தான பூமியைச் சமனப்படுத்துவதற்காக இமயமலையில் (நின்றும்) திருக்கல்யாணக் காட்சியில் வீற்றிருந்த கும்போத்பன்னரும், ரிஷிகளில் முதன்மையானவரும், முருகனருள் பெற்று அவனருளாலே பிரணவமும் தமிழும் உபதேசிக்கப் பெற்றவரும், சித்த வைத்தியத்தை உண்டுபண்ணியவரும், சிவபெருமானிடமே நேரடியாகத் தீட்சை பெற்று அவரின்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிமானத்துக்கும் அருளுக்கும் பாத்திரமானவருமாகிய அகத்தியமுனிவர் அனுமதிக்கப்பட்டுத் தெற்கு நோக்கிவரும் போது இந்திரன் பூசைக்கு உவந்து அவனுக்கு உதவும் பொருட்டுக் காகமாக வந்து அவருடைய கமண்டல நீரைக் கவிழ்த்துவிட, அதன் காரணமாகக் கோபங்கொண்டு துரத்தப்பட்டு, பின் தம் அனுக்கிரக மூர்த்தமாகத் தோன்றித் திருவருள் புரிய காகமாகக் கமண்டலத்தைக் கவிழ்த்தவர் விநாயகப் பெருமானே என்று அறிந்து மனம்வருந்தி அவரைக் குட்டும் முகமாகத் தாம் நீட்டிய கையினாலேயே தம்முடைய தலையிற் குட்டி ஸ்தோத்தரிக்கின்றார்.

அந்த ஸ்தோத்திரமானது வடமொழி ஸ்காந்தத்திலே மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

அதில் ஒருசில வரிகள் :

" ... ... ... கஜவக்த்ரம் மஹோதரம்
சூர்ப்பகர்ணம் ப்ரலம்போஷ்டம்
ஸகளம் காமரூபிணம்
கணநாம்த்வா கணபதிம்
கவீநாம்ச கவிம்பரம்
ப்ரம்மணும் ஜ்யேஷ்டராஜம்ச
ப்ரணமாமி சிவம்சதா
ஸர்வவிக்னப்ர சமனம்
ஸர்வபாப நிவாரகம்
ஸ்கந்தஸ்ய பூர்வஜம் தத்வத்
ப்ரணமாமி விநாயகம்
ஏவம்ஸ்துத்வா கணேசானம்
ப்ரணநாம புநஃ புநஃ "

இவை ஒரு சிலவே! அவருடைய துதிகள் மிகநீண்டவை. இவ்விதமாக அகத்திய மகாமுனிவர் தாம் செய்த பிழைக்காகத் தலையில் குட்டி அவரைத் தோத்தரித்து வணங்கி, பிரதட்சிண நமஸ்காரம் செய்துவேண்ட விநாயகப் பெருமான் சிறந்த பல வரங்களை அருள்செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிள்ளையார்

மாசில்லாத மனமுடைய பிள்ளைகளுக்கெல்லாம் தெய்வம் பிள்ளையார்.

மற்ற மூர்த்திகளுக்கெல்லாம் கண், கால், கை, காது, மூக்கு, செவி என்ற அங்கங்களை வைத்து வடிவமைக்க வேண்டும். ஆனால் பக்தியுடன் சிறிது மஞ்சள்பொடி, சந்தனம், சாணம் இவைகளில் ஒன்றைப் பிடித்துவைத்தால் போதும். பிள்ளையார் அங்கே உருவாகிவிடுவார்.

எல்லா எழுத்துக்களுக்கும், ஓசைகளுக்கும், எல்லா வேதங்களுக்கும் மூலமாகவும் பிறப்பிடமாகவும் விளங்குவது ''ஓம்'' என்ற பிரணவம். அப் பிரணவரூபமாக விளங்குபவர் பிள்ளையார். பிரணவம் தோற்றம் இல்லாதது. பிள்ளையாரும் தோற்றம் இல்லாதவர், தோற்றம் உண்டானால் முடிவும் உண்டு. முதலும் முடிவும் இல்லாத முழுமுதற் கடவுள் பிள்ளையார்.

இப்படித் தெய்வத்துள் எல்லாம் தெய்வமாகத் திகழும் மகாகணபதி ஏழை மக்களாம் நம்மைப் பொறுத்தவரை நம்பிள்ளை. காஞ்சிப் பெரியவர்கள் குறிப்பிட்டபடி அந்தப் ''பிள்ளையார்'' என்கிறோம். தேவர்களுக்கெல்லாம் தேவனான அவர் நமக்குப் பிள்ளையானார்.

**பூரணம் :**

நாம் பிடித்துக் கொடுக்கும் கொழுக்கட்டையில் (மோதகம்) பூரணமாக நிறைந்திருப்பவர் அவர்.

•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரணவம் :

அவருடைய யானைமுகத் தோற்றம்பற்றி எத்தனையோ தத்துவங்கள் உண்டு. ஆனால் நாம் கூர்ந்து கவனித்தால் ஓர் உண்மை புரியும்.

"ஓம்" என்ற எழுத்தே பிரணவத்தின் சாரம் என்பர். மகா கணபதியின் தோற்றத்தைப் பாருங்கள், அவருடைய முகமும், தும்பிக்கை அமைப்பும் "ஓம்" என்ற எழுத்தைப் போல் இல்லையா ? ஆம் அவரே பிரணவம், அவரே பிரணவ சாரம், அவரே பூரணம். அவரே முதல்வர். அவரே முழுமை, அவரே நம் பிறவி வினைதீர்க்கும் பிள்ளையும்கூட.

## இனிமை :

வெல்லத்தில் சிவனை நாம் செய்வதில்லை. பெருமாளைச் செய்வதில்லை. முருகனைச் செய்வதில்லை. ஆனால் பிள்ளையாரை மட்டும் வெல்லத்தில் செய்கின்றோம். காரணம் அவர்தான் இனிமை. அவரைத் தொட்டுக்கொண்டால் தொட்டதெல்லாம் இனிக்கும். இன்று தொடருகிறோம் — என்றும் இனிமை தொடரட்டும்.

விக்னேசுவரன் என்றும் - விக்னராஜா என்றும் அழைக்கப்பெறும் விக்னங்களைப் போக்கிடும் பிள்ளை 'கணபதியை மறவாமல் துதித்து இடையூறுகள் இல்லாத நல்வாழ்க்கையைப் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ச்சனைக்கு அருகம் புல்

விநாயகப் பெருமானின் அர்ச்சனைக்கு உகந்தது அருகம் புல். மலர்களைவிடக் கணபதிக்கு உகந்தது அருகம்புல். எந்தப் புதிய காரியத்தையும் தொடங்குவதற்கு முன்பும் விநாயகர் உருவம் அல்லது சிலை அல்லது படம் அல்லது மஞ்சள், சந்தனத்தால் தாபித்த விநாயகரை அருகம்புல்லால் அர்ச்சித்துவிட்டு தொடங்கினுல் விக்னமின்றி, தடையின்றி, தாமதமின்றிக் காரியம் நடக்கும். கேது கிரகத்தினுல் ஏற்படும் தோஷங்கள் துன்பங்கள் தீரவும் இந்தப் பூசை பயன்தரும்.

விநாயகரை அருகம்புல்லால் அர்ச்சிக்க அரிய 21 நாமங்கள் இவை :

1. ஓம் கணுதிபாய நமஃ
2. ஓம் பாசாங்குசதராய நமஃ
3. ஓம் ஆகுவாகனுய நமஃ
4. ஓம் விநாயகாய நமஃ
5. ஓம் ஈசபுத்ராய நமஃ
6. ஓம் ஸர்வஸித்தி ப்ரதாய நமஃ
7. ஓம் ஏகதந்தாய நமஃ
8. ஓம் இபவக்த்ராய நமஃ
9. ஓம் மூஷிகவாகனுய நமஃ
10. ஓம் குமாரகுரவே நமஃ
11. ஓம் கபிலவர்ணுய நமஃ
12. ஓம் ப்ரும்ஹசாரிணே நமஃ
13. ஓம் மோதக ஹஸ்தாய நமஃ
14. ஓம் ஸுரஸ்ரேஷ்டாய நமஃ
15. ஓம் கஜநாஸிகாய நமஃ
16. ஓம் கபித்தபலப்ரியாய நமஃ
17. ஓம் கஜமுகாய நமஃ
18. ஓம் ஸுப்ரஸன்னுய நமஃ
19. ஓம் ஸுராக்ரஜாய நமஃ
20. ஓம் உமாபுத்ராய நமஃ
21. ஓம் ஸ்கந்தப்ரியாய நமஃ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணபதி

பிரணவ மூர்த்தியாகிய விநாயகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்கட்குக் காட்சி கொடுத்துத் திருவருள் செய்யும் வண்ணங் கொண்டருளிய எண்ணிறந்த மூர்த்தங்களுட் பிரதானமான சில மூர்த்தி பேதங்கள் நாமாவளி வருமாறு :

1. பால கணபதி
2. தருண கணபதி
3. பக்த கணபதி
4. வீர கணபதி
5. சக்தி கணபதி
6. பிர்ம்ம கணபதி
7. பிங்கள கணபதி
8. உச்சிட்ட கணபதி
9. க்ஷிப்ர கணபதி
10. விக்ன கணபதி
11. ஹேரம்ப கணபதி
12. லக்ஷிமீ கணபதி
13. மஹா கணபதி
14. வல்லபை கணபதி
15. நிர்த்தன கணபதி
16. ஊர்த்துவ கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கணேச வைபவம்.

துதி

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப் புஜம்
ப்ரஸந்ந வதநம் த்யாயேத்
ஸர்வ விக்நோப சாந்தயே.

மேற் கூறப்பட்ட தியான சுலோகத்தைச் சொல்லி கணபதியை வழிபட்ட பின்புதான் எந்தக் கர்மாவையும் ஆரம்பித்தல் நம்முடைய சம்பிரதாயமாகும்.

பிரம்ம ஞானிகளும், சுருதி ஸ்மிருதிகளும், புராண இதிகாசங்களும், மஹா கணபதியை ஸ்தோத்திரம் செய்வதைக் காண்கிறோம்.

'' யம் பிரஹ்ம வேதாந்த விதோ வதந்தி
பரம் பிரதாநம் புருஷம் ததாந்யே
விஸ்வோத்கமே காரண மீஸ்வரம் வா
தஸ்மை நமோ விக்ந நிவாரணாய ''

வேதாந்த சாஸ்திர அனுபவத்தினால் பிரம்ம ஞானிகள் விநாயகரை, கணபதியை பிரம்மம் என்றும், பரம் என்றும், புருஷதத்துவம் என்றும், சராசர பிரபஞ்ச வடிவம் என்றும், சிருஷ்டிகர்த்தா என்றும், ஈசுவரன் என்றும் கொண்டாடுகிறார்களோ அந்தக் கணபதியை, கணேசரை, விநாயகரை வாழ்க்கையில் ஏற்படும் சகல விக்னங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கும் பொருட்டு நாம் வணங்குகின்றோம். ஆவணி சுக்ல சதுர்த்தி திதியில் முக்கண்ணனின் திருக்குமாரர் கணேசரை முப்பத்து முக்கோடி தேவர்கள், அசுரர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், கிம்புருஷர்கள், ஸித்த சாரணர்கள், பூவுலக வாசிகள் எல்லோரும் வணங்குகிறார்கள்.

இதற்கு ஆதாரமாக பார்க்கவ புராணம் உள்ளது. பார்க்கவ மஹரிஷி வியாச பகவானின் பிரதம சிஷ்யர். வியாச முனிவர் பார்க்கவரிஷிக்கு மகா கணேச மூர்த்தியின் மகிமையை எடுத்துரைத்தார். பார்க்கவ ரிஷியோ அதை விரிவாக உலக மக்களுக்கு எடுத்துரைத்து அளித்துள்ளார்கள். கணபதி கர்ப்பவாசனை உள்ளவர் அல்லர். ஜகன்மாதா ஆதிபராசக்தி ஆதிசிவன் அருளால் அவர்களுடைய அருள் நோக்கால் உற்பவித்தவர்.

அம்மை அப்பனின் பரிபூரண அன்பிற்கு ஆட்பட்டவர். சிரஞ்ஜீவியாக இருக்கவேண்டுமென்று வாழ்த்தியவர்கள். மார்க்கண்டேயருக்கு பதினாறு வயது என்பதுபோல் கணபதிக்கும் யௌவனப் பருவம்தான், தன்னை வணங்குவோர் செய்யும் காரியம் விக்னம் இல்லாமல் கை கூடி வரவேண்டிய மகத்தான சக்தி உடையவர். தந்தை அவரைத் தம் கணங்களுக்கெல்லாம் தலைவராக்கிக் கொண்டார். அதனால்தான் கணபதி என்றும், கணநாயகன் என்றும், கணேசன் என்றும் விளங்குகின்றார். விக்கினங்களைப் போக்குவதால் விநாயகர் என்றும் அழைக்கின்றோம். துஷ்டர்களைத் தண்டிப்பதன் பொருட்டு பல அவதார மூர்த்தங்களையும் எடுத்துக் கொண்டவர். இவைகள் எல்லாம் தசாவதார காலத்திற்கு முற்பட்டவையே. ஒவ்வோர் அவதாரத்திலும் ஒவ்வொரு பெயர் உண்டு.

அவைகள் ரத்ன கர்ப்ப விநாயகர். பரிபூரண விநாயகர், சித்தி விநாயகர், சிந்தாமணி விநாயகர், மாணிக்க விநாயகர், என்று ஆயிரக்கணக்கான நாமங்கள் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிள்ளைக்கு மற்றையோருக்கு ஒவ்வோர் இருப்பிடம் உள்ளதுபோல், ஓரிடம் இல்லிடம் வேண்டுமென்று ஜகன் மாதா ஜகத்பிதாவிடம் வேண்டிக் கொண்டபோது பிதா தேடினுர்.

எண்பத்து நான்கு லக்ஷம் ஜீவராசிகளில் மானிடப் பிறவி மேலானது. அவைகளுக்கு எல்லாம் ஆறு ஆதாரங் கள் உள்ளது. நவத்துவாரம் உள்ள மனித கோட்டை யிலேயே தம் மைந்தனுக்கு ஓர் இடம் அளித்துள்ளார்கள். இந்தக் கோட்டையில் ஒவ்வோர் அங்கத்துக்கும் ஒவ்வோர் அணுவிற்கும் ஒவ்வொரு தேவர் அதிஷ்டான தேவர்களா கும். அந்தந்தத் தேவர்களின் சக்தியால்தான் நமக்குப் பேசவோ, நடக்கவோ முடிகிறது. கண் இமைப்பதும், கைகள் இயங்குவதும், இருந்து எழுதுவதும் எல்லாம் அந்த அந்தத் தேவ அருள்தான், இந்தச் சரீரமான கோட்டையில் கணபதி எங்கும் வீற்றிருக்கிருர்.

நமது நாபிக்கமலத்துக்குச் சுமார் நான்கு அங்குலம் தள்ளி அடி வயிற்றில் மூலாதாரத்தில் வீற்றிருக்கிருர்;

"குதாத் த்வயங்குல மூர்த்வம் து
லிங்கா தேகாங் குலாதயஃ
மூலாதாரஸ்திரி கோணுபம்
சதுர்த்தள சரோருஹம்
வசஷ ஸாக்ஷரே யுக்தம்
லஸதோங்கார கர்ணிகம்
தத்ரஸ்தம் வல்லபீரம்யம்
கணேஸ்வர முபாஸ்மஹே"

குத பாகத்துக்கு இரண்டு அங்குலம் மேலாக மூலா தாரத்தில் நான்கு தளங்களில் வ, ச, ஷ, ஸ என்ற அக்ஷரங்களால் அலங்கரிக்கப்பட்ட திரிகோண மத்யத்தில் ஓங்காரம் என்ற கர்ணிகையில் வல்லபாஸமேதராக மனே ஹரமாக ஸ்ரீ கணபதி வீற்றிருக்கிருர். தேகத்துக்கு மைய மான இடத்தில் நடுநாயகமாக வீற்றிருக்கிருர். அவரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய ஆஞ்ஞையாலும் தேவதைகள் தத்தம் காரியங்களைச் செவ்வனே நடத்துகிறார்கள்.

கணபதியின் ஸ்வரூபம் ஓங்கார "ஸ்வரூபம்" நாம் மூச்சு விடுகிறோம் மூச்சு நின்றுவிட்டால் நாம் பிணமாகி விடுகிறோம். இந்த மூச்சின் உற்பத்தி ஸ்தானம் - மூலாதாரம் கணபதி வீற்றிருக்கும் இடம். மூச்சு விடும்போது லேசான ஒரு சத்தம் உண்டாகிறது. இதை நாம் "ஓம்" என்று குறிப்பிடுகிறோம். இந்த ஓம் என்ற ஓங்காரம் ஸப்தம், விநாயகர் ஸ்ரூபம். சப்தம் சூக்ஷ்மமானது. அந்த சப்தத்திற்கு ஸ்தூலமாக ரூபம் சித்தரிக்க வேண்டுமென்றால் அதுதான் விநாயகரின் ஸ்வரூபம். அந்த ஓங்கார ஸ்வரூபனை தம் கிருதியில் "வாதாபி கணபதிம்பஜே" என்று அழகாகச் சித்தரிக்கிறார். இந்த ஓம் என்ற சப்தத்திலிருந்துதான் அக்ஷரம் உண்டாகிறது. அக்ஷரத்திலிருந்து பதம், பத்யம், கத்யம் உண்டாகின்றன. நாம் பேசும் எழுதும் பாஷைகளுக்கு ஆதாரமாக இருப்பதே "ஓம்" என்ற சப்தமாகும்.

ஓம் என்ற மஹா மந்திரச் சொல்லானது ஒவ்வோர் மஹா மந்திரத்தோடும் இணைக்கப்பட்டிருக்கிறது. 72000 மஹா மந்திரங்கள் உள்ளன.

"மந்திர மஹோததி கிரந்தம்" என்று இந்த மந்திரங்கள் அடங்கிய நூலுக்கு பெயர். ஒவ்வோர் மந்திரமும் ஓம் என்ற பிரணவத்துடன் இணைக்கப்பட்டால்தான் அதற்கு சக்தி (வலு) உண்டாகும். ஓம் நமச்சிவாய, ஓம் சரவணபவாய, ஓம் நமோ நாராயணாய, என்று மந்திரங்களை நாம் கேட்டிருக்கின்றோம்.

உலகில் மதங்களை ஆறு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். அவை காணாபத்யம், ஸௌரம், சாந்திரம், சைவம், சாக்தம், வைஷ்ணவம் என்பனவாகும்.

கணபதியை வணங்குபவர் மற்றத் தெய்வங்களை வணங்கிய பலனையும் அடைவார்கள். மற்றைய எல்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தினரும் கணபதியைப் பூஜித்த பின்னர்தான் தங்கள் தங்கள் இஷ்ட தெய்வத்தை வணங்க முடியும். இது 'கண பதிக்கு உரிய தனி மகிமையைக் காட்டுகின்றது.

வைஷ்ணவக் கோயில்களிலும் கணபதி வழிபாடு உண்டு. ஸ்ரீ ரங்கநாதர் கோயிலிலும் விநாயக மூர்த்தி யைக் காணலாம். விநாயக சதுர்த்தியன்று அங்கே கணேச ருக்குத்தான் முதல் பூஜை.

நவக்கிரகங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் சக்தி உண்டு. ஒவ்வோர் கிரகத்தையும் தனித்தனியே வேண்டிக் கொள்வதை விட்டு விநாயகரைப் பூஜித்தால் நம் குறைகள் நீங்குகின்றன. நவசக்தி படைத்தவர். அதனுல் அவருக்கு நவசக்தி விநாயகர் என்ற பெயரும் உண்டு. காரிய சித்திக் காக ஈரேழு உலகங்களும் கணேசனை வணங்குகின்றன.

பரமசிவன், பார்வதி, சுப்பிரமணிய சுவாமி, ஸ்ரீ ராமச் சந்திரமூர்த்தி, கிருஷ்ண பகவான், அகத்தியர், நாரத, வியாச, பார்க்கவ முதலிய முனி சிரேஷ்டர்கள் முதலான வர்கள் எல்லோரும் கணேசனை மஹா கணபதியை ஸித்தி லக்ஷ்மி விநாயகர். நவசக்தி விநாயகரை நினைத்தோ, பூஜித் தோ விரும்பிய எல்லா சௌபாக்கியங்களும் கிடைக்கப் பெற்றவர்கள், எல்லோரும் பூஜிப்பதனுல் வேறு முரண்பாடு ஏதும் இல்லை. தெய்வம் என்பது ஒன்றுதான் என்ற உண் மையை விநாயகர் வழிபாடு தெட்டத் தெளிவாகப் பறை சாற்றுகிறது. கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் என்பதை "கலௌசண்டீ விநாயகௌ" என்று ஸ்மிருதி சொல்லு கின்றது. எது அழிந்தாலும் நிரந்தரமாக இருப்பவர் என் பது இதன் பொருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரணவ ரூபம்

பிரணவமானது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும் மற்றைத் தேவர்கட்கெல்லாம் பிறப்பிடமாக வும், எல்லா மந்திரங்களுக்கும், வேதங்களுக்கும் மூலமாக வும் உள்ளது, பிரணவம் மூலமொழி எனவும், ஓங்காரம் எனவும், குடிலை எனவும் படும். இதன் வடிவமே விநாயகக் கடவுள். விநாயகப் பெருமான் பிரணவ வடிவினராதலை அவரது திருமுகம் உணர்த்தும். அதனையே யானை முகம் என்று பெரியோர் கூறுவர்.

பிரணவத்தின் வரிவடிவை முதற்கண் அறிவது மரபாம். முதலாம் இரண்டாம் உறுப்புக்கள் நட்சத்திர வடிவு, தண்ட வடிவுகளாக அமையப் பெற்றது. பிரணவம் என்று காமிகாமகம் கூறுகிறது. ஆகையால் அவ்விரண்டு உறுப்பும் கலந்த வடிவம் ஊமை எழுத்தென்றும் மூலமதி என்றும் பிள்ளையார் சுழி என்றும் மௌநாக்ஷரம் என்றும் சொல் லப்படும்.

"உ" என்னும் எழுத்து நாதவிந்துக்களின் வரி வடி வம். இது ஓங்கார வாக்கியராகிய விநாயகரது துதிக்கை போலாகும். இது பற்றி "கணபதியை" முதலில் வழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் மரபை உலகம் கைக்கொண்டு அநுஷ்டித்து வருகின்றது. இதனை சிவபெருமான் அவருக்கு அருளிச் செய்தாரென்று உண்மை நூல்கள் கூறும்.

விநாயகரும், சிவமும், சக்தியும், முருகனும், பிரணவ சொரூபியாவார். சிவபெருமானை ஓங்காரப் பொருளென்று வேதம் கூறும். திருநாவுக்கரசு சுவாமிகளும் "ஓங்காரத்து உட்பொருளானை" என்று திருவாய் மலர்ந்துள்ளார். சிவத்தோடு அபேதமாய் விளங்கும் விநாயகரது தாயை 'உம' என்று வேதம் கூறி "உமசகாயம்" என்று சிவத்தைத் துதிக்கும்.

அ - உ - ம என்னும் பிரணவம் உ - ம - அ எனத் திரிந்து விளங்கும், ஷண்முகக் கடவுள் பிரணவ வடிவினராதலே அவரது ஆறு திருமுகங்களுள் ஒன்று உணர்த்தும்.

## கடவுள் இருக்குமிடம்.

மக்கள் கடவுளைக் கோயிலில் தேடுகிறார்கள், மற்றவர்களும் தங்கள் ஆலயங்களில் தேடுகிறார்கள், எங்கு தேடியும் அவர்களுக்குக் கடவுள் தென்படுவதில்லை. முயற்சியை விடாமல் அழுது கொண்டே அனைவரும் கடவுளைத் தேடிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் கடவுள் ஒவ்வொருவனுக்கும் அருகில் இருப்பதை அவர்கள் உணருவதில்லை. ஒவ்வொருவனுடைய இதயத்தின் உயிர்த் துடிப்பிலும் கடவுள் வசித்து வருகிறார். அதை அறிந்து கொள்ளும் ஆற்றல் மக்களுக்கு இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# விநாயகரும் அறுகம்புல்லும்

திருநின்ற ஊர் என்ற நகரத்தில் குணசீலன், குணசீலி என்ற அரச தம்பதிகள் அரசாண்டு வந்தனர். அவர்கள் தினமும் அந்த நகரத்தில் புராணக் கதை, காலட்சேபம் நடக்கின்றதோ அங்கே சென்று கதைகேட்டு வருவார்கள். அப்படி ஒருநாள் வித்தக விநாயகன் ஆலயத்தில் நடக்கும் காலட்சேபத்திற்குச் சென்று கதை கேட்டுக் கொண்டிருந்த போது அவ்விடத்தில் ஏழை அந்தணன் ஒருவன் வறுமை யின் கொடுமையால் குறைந்த அளவுடைய உடையுடன் இருப்பதைப் பார்த்தார்கள். தர்ம நெறியுடனும், கருணை உள்ளத்தோடும் அரசாளும் அரசன் அன்று விநாயகர் திரு வருளால் அந்த அந்தணனைப் பார்த்துச் சிரித்துவிட்டார்.

அரச சிரிப்பினால் அவமானமடைந்த அந்தணர் கூனிக் குறுகி ஒரு மூலையில் நின்றார். இந்தநிலை அரசனை மேலும் சிரிப்புக்குள்ளாக்கியது. அந்தணர் அவமானத்தால் அதிக கோபமுற்றார். "ஏழ்மையால் வாடும் என்னைப் பார்த்து எள்ளி நகையாடும் அறிவில்லாத அரசே, பல்லைக்காட்டி கேலி செய்ததால் நீ ஓர் எருதாக மாறக் கடவாய்" என்று சபித்து விட்டார். அரசனே உடனே ஓர் எருதாக மாறினான். நாயகன் எருதாக மாறியதைக் கண்ட அரசி அந்தணர் மீது கோபமுற்று "எனது கணவன் எருதாக மாறச் சபித்த நீ பொதி சுமக்கும் கழுதையாக மாறக் கட வாய்" என்று சபித்தாள். அந்தணன் கழுதையாக மாறி னான். கழுதையாக மாறினாலும் நெறி தவறாத அந்தணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் அவர் அரசியைப் புல் சுமக்கும் பெண்ணுகச் சபிக்க அவ்வாறே அரசியும் உரு மாறினுள்,

புல் சேகரித்துக்கொண்டு ஒரு நாள் வீடு திரும்புகையில் காற்றும் மழையும் பலமாகப் பெய்யத் தொடங்கின. புல்லும் தானும் நனையாது இருக்க அருகில் இருந்த விநாயகர் ஆலயத்துள் நுழைந்தாள். எருதும் கழுதையும் முன்னரே கோயிலில் இருந்தன. அப்புல்லைக் கண்டதும் அதன் சுவையை அனுபவிக்கத் தொடங்கின. மேலும் காற்று பலமாக வீசத் தொடங்கவே புற்கட்டிலிருந்த அறுகம்புல் அங்கே அருளாட்சி புரியும் விநாயகர் மீதும் பறந்துசென்று வீழ்ந்தது. அன்று விநாயக சதுர்த்தி தினமாதலால் சந்நிதி திறந்திருந்தது. பெருங்கூட்டமும் சந்நிதி முன் இருந்தது. பூஜை நேரத்தில் கோவிலுக்குள் நுழைந்திருந்த எருதையும், கழுதையையும் அங்கு கூடியிருந்த மக்கள் துரத்தினர். புல் கட்டையும் அவை இழுத்துச் சென்றதால் புல் சுமக்கும் பெண்ணும் கூடவே கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்தாள். தம்மைச் சுற்றி வந்ததாலும், அவர்கள் மூலமாக அறுகம் புல் தம்மீது விழுந்ததாலும் விநாயகப் பெருமான் பேரானந்தம் அடைந்தார். அவ்விதமான ஆனந்தம் காரணமாக அதற்குக் காரணகர்த்தாக்களான மூவருக்கும் நல்லருள் புரிந்து சாபவிமோசனம் அருளி தேவலோகம் செல்ல நல்லருள் பாலித்தார்.

ஆகவே விநாயகப் பெருமானுக்கு உயர்ந்ததான நிவேதனங்களைப் படைக்க வேண்டிய அவசியமில்லை, எங்கு வேண்டுமானுலும் கிடைக்கும் அறுகுகொண்டு அன்பிேைடு அர்ச்சித்தால் போதும், என்ற தத்துவத்தை இக் கதை நன்கு உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௨



# இராவணன் பூஜித்த பிள்ளையார்

இராவணன் கான மழை பொழிந்து ஈஸ்வரனைத் துதித்து பற்பல வரங்களைப் பெற்றான். அதில் ஒன்று எக்காலத்திலும் அண்டசராசரங்கள் அழிந்தாலும் இலங்கை மாநகரம் மட்டும் அழியக்கூடாது என்ற வரத்தினைத் தந்தருள வேண்டும் என்பதாகும். சிவபெருமான் வரத்தையும் கொடுத்து ஒரு சிவலிங்கத்தையும் கொடுத்தார்.

கீழே வைக்காமல் எடுத்துச் செல்லவேண்டும் இல்லையென்றால் வைத்த இடத்திலேயே சிவலிங்கம் ஊன்றிவிடும் என்ற நிபந்தனையையும் கூறியருளினார் சிவபெருமான்.

இராவணன் தபோவலிமையால் பெற்ற வரங்களால் தனக்கும் தனது பதவிக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடும் என்று அஞ்சிய இந்திரன் தேவாதிதேவர்களுடன் கலந்து ஆலோசித்து விநாயகப் பெருமானிடம் சென்று இராவணனை எப்படி தோற்கடிப்பது என்று வினவினார்கள். விநாயகப்பெருமான் அப்போது அவர்களைக் காப்பாற்றுவதாக அருள் புரிந்து, அந்தணச் சிறுவனாக வேடம் தரித்து விநாயகப் பெருமான் இலங்காபுரிக்குப் பாடம் கற்பிக்கப் புறப்பட்டார். லிங்கத்தை தாங்கி நடந்து வந்துகொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் முன் சென்றார். களைத்திருந்த இராவணன் முன்னால் வரும் அந்தணனைப் பார்த்து இந்தச் சிவலிங்கப் பெருமானை சற்று நேரம் வைத்துக்கொள்ளும், இந்தக் குளிர்ந்த நீரில் நீராடிவிட்டு வந்து விடுகிறேன். தயவு செய்து கீழே மட்டும் வைக்க வேண்டாம் என்று உதவி கேட்டதும் அந்தச் சிறுவன் ஐயா விரைவாக வந்துவிடுங்கள், இக் கனமான சிவலிங்கத்தை வெகு நேரம் தூக்கி வைத்திருக்க முடியாது என்று கூறிப் பெருமானைப் பெற்றுக் கொண்டார். சிறிது நேரத்தில் அவர் மூன்று முறை கூவி அழைத்தும் வராததைக் கண்ட சிறுவன் பாரம் பொறுக்க முடியாமல் கீழே வைத்துவிட்டார். ஸ்நானம் செய்து திரும்பி வந்து பார்க்கையில் சிவலிங்கப் பெருமான் கீழே இருப்பதைப் பார்த்த இராவணன் கோபங்கொண்டு சிறுவனின் தலையில் குட்ட கையை ஓங்கியபடி துரத்தினான். அவர் கைக்கு எட்டுவது போலவும், தூரப் போவது போலவும் பாசாங்கு செய்து அவனை அலைக்கழித்தார். அதனால் ஆயாசமுற பெருமானைத் துதிக்க விநாயகப் பெருமானாக தோற்றமளித்தார்.

அப்போது அவரைத் தரிசித்த இராவணன் அவரை விழுந்து வணங்கி, அவரைக் குட்டும்படி எடுத்த கையினால் தன் தலையில் தானே குட்டி மன்னிக்குமாறு வேண்டினான். அப்போது விநாயகப் பெருமான் அவனுக்கு வரமளித்து தவறை மன்னித்து உனது தலையில் இப்போது குட்டியது போல் எவர் செய்து வணங்கினாலும் உனக்கு அருள்புரிந்தது போல் அவர்களுக்கும் எவ்வித ஆபத்து வந்தாலும் தடுத்தாட்கொள்வோம் என்று அருள்பாலித்தார்.

இராவணன் வழிபட்ட பிள்ளையார் கோவில் இன்றும் திருக்கோகர்ணத்தில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# மோதக ஹஸ்த கஜானன்

பிள்ளையார் சதுர்த்திப் பண்டிகை என்றவுடன் நினைவுக்கு வருவது கொழுக்கட்டைதானே! முதலில் மோதகத்தைச் செய்த பின்னே பிடி கொழுக்கட்டை செய்வர். தேங்காய் வடிவிலிருக்கும் இந்த மோதகத்தை விசேஷமாகப் பிள்ளையாருக்குப் படைப்பதன் நோக்கம் என்ன?

முதம் என்றால் ஆனந்தம் என்பது பொருள். முதத்தைத் தன்னுள்ளே கொண்டுள்ளதே மோதகம்.

தேங்காய், வெல்லம், பருப்பு, ஏலம் இவற்றைக் கலந்து செய்யப்பட்ட 'பூரணம்' என்பதை உள்ளே வைத்து வேகவைத்த அரிசி மாவினால் மூடப்பட்டுள்ளதே 'மோதகம்' என்னும் தின் பண்டம்.

மேலே மூடப்பட்டுள்ள மாவைப் பிரித்து உள்ளேயுள்ள பூரணத்தைத்தான் நாம் விரும்பிச் சுவைத்து இன்புறுகின்றோம். இதில் அடங்கியுள்ள ஓர் அரிய கருமத்தைக் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

எங்கும் நிறைந்திருப்பது என்பதே பூரணம் என்பதன் பொருள். இதையே "பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தமே" என்று தாயுமானவரும் "ஊனுக்குள்ளே நீ நின்று உலவினதைக் காணமல் நானென்றிருந்து நலமிழந்தேன் பூரணமே" என்று பட்டினத்தடிகளும் பாடியுள்ளார்கள்.

அந்தப் பூரணமாகிய சிவத்தை உள்ளே வைத்து மண்ணும் நீரும் கலந்து செய்யப்பட்ட உடம்பினல் மேலே மூடியிருக்கிறது பரப்பிரம, பரிபூரணனந்த சக்தி. வெளியே அலைபாய்ந்து கொண்டிருக்கும் மனதைச் சிறிது உள்புறமாகத் திருப்பிப் பாருங்கள், அங்கு ஒலித்துக் கொண்டிருக்கும் "ஓம்" என்ற நாதவித்தினுள் ஒளி வீசிக் கொண்டிருக்கும் சிவ பரம் பொருளாகிய அருட்பெரும் ஜோதியை அனுபவித்து இன்புறுங்கள். அப் பரம் பொருளே உலகமெங்கும் பரிபூரணமாய் பரந்து நிற்பதை வேதங்கள் உபநிடதங்கள் ஞானிகள் வாக்கு மூலம் அறியலாம்,

இதுவே விநாயகப் பெருமானுக்கு மோதகம் நிவேதனம் செய்வதன் பொருளாகும்,

## இரட்டைப் பின்னல்

தலை முடியினை இரு கூறுகளாக்கி வகுக்கும்பொழுது தலையின் பின்புறத்தில் உள்ள துல்லியமான நரம்புகள் பாதிக்கப்பட்டு அதன் காரணமாகக் கண் பார்வைக் குறைவு, மலச்சிக்கல், தலைவலி, யோசனை ஆகியவை ஏற்படுகின்றன. நம் முன்னோர்கள் 'குடுமி' வைத்துக் கொண்டிருந்ததும் இதே காரணத்தினல்தான் என்பதைக் கூறத் தேவையில்லை. தலையின் பின்னல் இருக்கும் மூளையின் மர்ம ஸ்தானமாகிய 'முகுளத்திற்கு' பாதுகாப்பே குடுமி என்பதாகும். இன்று நகைப்புக்கு இலக்காகியிருக்கும் குடுமி அறிவியல் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதனை நாம் உணர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
85719

உ

# கணபதியும் அனுக்கிரஹங்களும்.

| | | |
|---|---|---|
| 1. | கணபதி அருள் கிடைக்க | ஏகாக்ஷர கணபதி |
| 2. | பரிபூரண சித்திக்கு | மஹா கணபதி |
| 3. | கடன் நிவிர்த்தியாக | ருணஹரண கணபதி |
| 4. | தேவி அனுக்கிரஹம் கிடைக்க | மஹாவித்யா கணபதி |
| 5. | ஜகத் வசியம் அடைய | ஹரித்திரா கணபதி |
| 6. | அதிஷ்ட இலாபம் கிடைக்க | வக்ரதுண்ட கணபதி |
| 7. | நிதிப்ராப்திக்கு | நிதி கணபதி |
| 8. | தான்ய விருத்திக்கு | புஷ்டி கணபதி |
| 9. | சந்தோஷம் பெருக | பால கணபதி |
| 10. | ஸர்வகார்யப்ரதம் அடைய | சக்தி கணபதி |
| 11. | துரித பலன் கிடைக்க | க்ஷிப்ரப்ரகலா கணபதி |
| 12. | ரோக நிவர்த்தி அடைய | குக்ஷிக கணபதி |
| 13. | புத்ரப்ரதம் கிடைக்க | சந்தான கணபதி |
| 14. | ஸ்வர்ணப்ரதம் கிடைக்க | ஸ்வர்ண கணபதி |
| 15. | மனச்சாந்தி அடைய | ஹேரம்ப கணபதி |
| 16. | ஜயம் ஏற்பட | விஜய கணபதி |
| 17. | நவக்கிரஹ சாந்திக்கு | அர்க்க கணபதி |
| 18. | ராஜயோகம் கிடைக்க | விக்னராஜ கணபதி |
| 19. | சங்கடங்கள் நிவர்த்தியாக | சங்கடஹர கணபதி |
| 20. | தைரியப்ரதம் அடைய | வீர கணபதி |
| 21. | சகல போகப்ராப்தம் அடைய | போக கணபதி |
| 22. | துக்க நிவாரணம் அடைய | துர்க்கா கணபதி |
| 23. | கலாப விருத்திக்கு | நிருத்த கணபதி |
| 24. | சர்வ கார்யம் ஜெயம் அடைய | ஸித்தி கணபதி |
| 25. | ஆபத் நிவர்த்திக்குப் | ஆபத்ஸகாய கணபதி |
| 26. | விஷ்ணு பக்திக்கு | வாமன கணபதி |
| 27. | தூப நிவர்த்திக்கு | தூர்வா கணபதி |
| 28. | குரு அனுக்ரஹம் கிடைக்க | குரு கணபதி |
| 29. | மனோவசியம் அடைய | நவநீத கணபதி |
| 30. | மேதா விருத்திக்கு | மேதா கணபதி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# வாதாபி கணபதி

பூர்வத்தில் பரஞ்சோதி என்னும் சேனதிபதியாக விளங்கிய சிறுத்தொண்ட நாயனர் என்பார் ஒரு சிறந்த சிவ பக்தர். சேனதிபதியாக வாதாபியின் மேல் படையெடுத்துச் சென்று யுத்தம் செய்து வெற்றிவாகை சூடியபின் அங்கேயிருந்து கொண்டுவந்து விநாயகமூர்த்தியைத் திருச்செங்காட்டங் குடியில் ஆலயத்தில் ஸ்தாபித்து வழிபாடு செய்தார். வாதாபி கணபதி உருவமைப்பிற் சற்று மாறுபட்டவர். மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிதுடையவர், இவர் அமர்ந்த திருக்கோலத்தில் இருகைகளுடனும் அவைகள் தொடைகளில் அழுத்தியனவாகவும் உட்புறம் மடித்த கால்களுடனும் இடதுபுறம் சுழித்த துதிக்கையுடனும் காட்சி கொடுத்து அருள்புரிந்து கொண்டேயிருக்கிறூர். தம்மை வந்து தரிசித்து வழிபடுவோர் குறைகளை நீக்கி அருள் புரிகிறூர். மைசூர் மகாராஜா முதல் அவர்மீது மிகு பக்தியுடன் விளங்குபவர் அநேகர்.

கயமுகனேச் சங்காரம் செய்தபோது அவன் உடலிலிருந்து ரத்தம் பெருக்கோடியதால் இவ்விடம் செங்காடாக மாறியது. விநாயகப்பெருமான் தாபித்து சிவனைப் பூசித்த தலமும் இதுவேயாகும்.

ஆகவே கணபதி சிவபெருமான் இருவருமே விசேடமுடையவர்களாக விளங்குகிறூர்கள்.

இந்த க்ஷேத்திரம் திருவாரூர், திருமருகல் பாதையில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அகரம் புல் (அறுகம் புல்)

கல்யாண குணங்கள் நிரம்பப் பெற்றவர் கணபதி. மட்டமாக நினைப்பதனை 'தருணம் போல்' என்கின்றோம் அதாவது தருணம் என்பது புல் ஆகும். புல்லானாலும் புருஷன் என்கிற பழமொழிகூட, புல் எளிய பொருள் என்பதாக விளங்குகிறது, அதனையே தனக்குப் பிரீதியான பொருளாகக் கொண்டார், மகா கணபதி என்கிற விநாயகப் பெருமான். அந்த அகரம்புல் ஒரு சிறந்த மருத்துவ மூலிகை "அ" எழுத்து எப்படி முதலோ அப்படியே பூமியில் முதல் தோற்றமே "அகரம் புல்" என்று வழங்கி வந்து நாளடைவிலே தேய்ந்து "அறுகம் புல்" ஆகிவிட்டிருக்கிறது, இதனையே மூதண்டம் என்றும் சொல்லுவார்கள். இது உஷ்ணத்தைத் தணித்து குளிர்மையைத் தரவல்லது. கடும் கோடை காலத்தில்கூட புல்வெளியிற்பட்டு வரும் காற்று குளிர்ச்சியாக இருக்கிறதல்லவா ?

அனலாசுரனை விழுங்கி மூவுலகும் வாழ வழி செய்த ஞானயோகரான கணபதிக்கு உஷ்ணம் தணித்துக்கொள்ள அறுகு உதவுகிறது. அதன் தத்துவம் உணர்ந்த முதல்வன் தம் தலையிலேயே இதனைச் சூடினன். இது எளிதில் கிடைக்கக் கூடியது. இதை அவருக்கு அர்ப்பணம் செய்வதால் தீர்க்க ஆயுள், ரோக நிவர்த்தி ஏற்பட்டு சௌபாக்கியம் கிட்டும்.

தூர்வை எனப்படும் இந்த அறுகினல் ஹோமம் செய்தால் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு கிட்டும். இருபத்தியொரு அறுகம் புல்லினல் அர்ச்சனை செய்வது மகா விசேஷம். அதற்கெனவே தனியாக மந்திரமுறை உள்ளது. இருபத்தொரு அறுகு அர்ச்சனை ஹோமம் என்பன காணபத்தியத்தில் மிக விசேஷமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாத சதுர்த்தியிலும், ஆவணி விநாயக சதுர்த்தியிலும் இஷ்டகாம்யத்தின் பொருட்டு அறுகம்புல் அர்ச்சனை விசேடமாகச் செய்யப்படுதல் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கணபதி போற்றி (108)

அருள்மிகு முகனே அழகா போற்றி
அரனின் மகனே குழகா போற்றி
ஆனை முகத்தவா அருளே போற்றி
ஆதி பரம்பொருள் ஆனாய் போற்றி
இகபர சுகமது அருள்வாய் போற்றி
உருகுல பதியைக் கடிந்தாய் போற்றி
உமையின் சீர்பெறும் மைந்தா போற்றி
ஊரும் ஆகுவாகனா போற்றி
எழில் நடம்புரியும் இறைவா போற்றி
ஏரம்ப னெனும் பொருளே போற்றி

ஐங்கர முடைய ஐயா போற்றி
ஒப்பிலா மணியே உயர்வே போற்றி
ஒசித்த கொம்பினை யுடையாய் போற்றி
ஓரெழுத் தாகிய தாரக போற்றி
கணபதி யெனும் கணநாதா போற்றி
கரியுருக் கொண்டாய் கண்ணே போற்றி
காவிய பாரதம் வரைந்தாய் போற்றி
காவிரி தோன்றக் காரணா போற்றி
கைலையை ஔவைக் கீந்தாய் போற்றி
கரும்பினை விரும்பும் கண்ணே போற்றி

முப்பழம் அதிரசம் கொள்வாய் போற்றி
அப்பம் அவல்பொரி விழைந்தாய் போற்றி
கைத்தலம் நிறைகனி யுடையாய் போற்றி
உத்தமி புதல்வா உறவே போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்த மனைத்தும் காப்பாய் போற்றி
தேரச்சது பொடிசெய் தீரா போற்றி
தீராப் பிணியும் தீர்ப்பாய் போற்றி
ஆராத இன்பம் அருள்வாய் போற்றி
பக்தருக் கருளும் பரமா போற்றி
பன்னிரு கரத்தவன் முதல்வா போற்றி

பாம்பணை யானின் மருகா போற்றி
சக்கரம் மாலுக் கீந்தாய் போற்றி
சடுதியில் வரமருள் இறைவா போற்றி
சுந்தர ரூபா சிறுவா போற்றி
சீதப் பணிமதி முடியாய் போற்றி
ஈசனின் மைந்தா உயிரே போற்றி
மூலப் பொருளே முதல்வா போற்றி
முக்கணான் மைந்தா பாலா போற்றி
தொப்பண குட்டு முகப்பாய் போற்றி
தற்பர சிற்பர சுகத்தாய் போற்றி

செம்பவளக் குன்றனையாய் போற்றி
வேதமும் தாங்கும் பாதா போற்றி
நடனமும் கடந்து நிறைந்தாய் போற்றி
இன்னருள் புரியும் நின்னருள் போற்றி
என்னரும் பொருளே அரசே போற்றி
வல்லபைக் கணேச குருவே போற்றி
திருவுங் கல்வியும் தருவாய் போற்றி
திருவடி பணிவோர்க் கருள்வாய் போற்றி
விளங்கு சித்தி விநாயகா போற்றி
கருங்குழி விளங்கும் கண்ணே போற்றி

குருவும் தெய்வமும் ஆனாய் போற்றி
பாம்பினை நூலாய்க் கொண்டாய் போற்றி
பரம பதமதுன் பதமே போற்றி
அக்ஷர மாலை யதுகந்தாய் போற்றி
வல்லமை அனைத்தும் தருவாய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதாபி கணபதி நாதா போற்றி
வரமருள் தயாள குருவே போற்றி
வருந்தும் துயரது துடைப்பாய் போற்றி
வந்தவினையது போக்குவாய் போற்றி
நினைத்ததை முடிக்கும் நிமலா போற்றி

அறிவாய் ஒளிரும் நின்னுரு போற்றி
மாதுளை மாங்கனி உவந்தாய் போற்றி
என்றும் இளையாய் இறைவா போற்றி
அரக்கனைப் போரில் வென்றாய் போற்றி
மங்களம் புரியும் மன்னா போற்றி
திங்களைக் கடந்த பாலா போற்றி
வித்தக மருப்புடைப் பெருமா போற்றி
மத்தள வயிற்றினை உடையாய் போற்றி
உலகுக்கு உயிராய் நிறைந்தாய் போற்றி
செய்ப்பதி மேவிய புண்ணியா போற்றி

சிற்றடி போற்றினேன் தலைவா போற்றி
கழலினை சேர அருள்வாய் போற்றி
சம்புவின் குமார அமரா போற்றி
அறுகினை முடிமேல் அணிவாய் போற்றி
எருக்கினை விரும்பிச் சேர்ப்பாய் போற்றி
தும்பை துலங்கும் மார்பா போற்றி
அம்மை அருளிய சேயே போற்றி
கம்பை மேவும் கணபதி போற்றி
நம்பினோர்க் கருள்புரி மூர்த்தியே போற்றி
திக்கெலாம் புகழ்பெறு தீரா போற்றி

தியான மூர்த்தியே தீரா போற்றி
மந்தர மூர்த்தியே மூலா போற்றி
தந்தர மூர்த்தியே தேவா போற்றி
யந்தர மூர்த்தியே தேவா போற்றி
வேண்டுவ தருள் வீரா போற்றி
வெற்றியை அருளும் கருணை போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தியை வளர்க்கும் புனிதா போற்றி
அத்தி முகத்தவா அருள்வாய் போற்றி
ஆறுமுகத்தவனுக் கண்ணா போற்றி
மூவுல காளும் முதல்வா போற்றி 90

முக்குணம் கடந்த நாதா போற்றி
மூன்று கண்ணுடை இறைவா போற்றி
கற்பகக் களிறே குருவே போற்றி
நாலிரு புயத்தாய் நாயகா போற்றி
நாற்றிசை போற்றும் தலைவா போற்றி
நானற்ற விடமே நிற்பாய் போற்றி
அல்லல் களையும் அன்பே போற்றி
எல்லாம் வல்ல இறைவா போற்றி
அஞ்சக் கரத்தின் பொருளே போற்றி
பூத மைந்தும் ஆனாய் போற்றி 100

வேத நான்கின் பொருளே போற்றி
நாத முடிவின் முடிவே போற்றி
முடிவும் வடிவும் இல்லாய் போற்றி
அடியும் முடியும் நீயே போற்றி
கடிமலர் பூசை ஏற்பாய் போற்றி
வடிவ மனைத்தும் ஆனாய் போற்றி
வேத முதல்வா விநாயகா போற்றி
வேழமுகத்தரசே போற்றி செய போற்றி. 108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துதி

ஓம்கார நிலயம் தேவம்
கஜவக்த்ரம் சதுர்புஜம்
பிசண்டில மஹம் வந்தே
ஸர்விக்ஞோப சாந்தயே
ஸுமுகச் சைகதந்தச்ச
கபிலோ கஜகர்ணக:
லம்போதரச்ச விகட:
விக்னராஜோ விஞயக:
தூமகேதுர் கணுத்யக்ஷ:
பாலசந்த்ரோ கஜானன:
வக்ரதுண்ட: சூர்ப்பகர்ண:
ஹேரம்ப: ஸ்கந்தபூர்வஜ:
ஷோடசைதானி நாமானி
ய:படேத் ச்ருணுயாதபி
வித்யாரம்பே விவாஹேச
ப்ரவேசே நிர்கமேததா
ஸங்க்ராமே ஸங்கடேசைவ
விக்னஸ்தஸ்ய நஜாயதே

மங்களம் திசதுமே விஞயகோ
மங்களம் திசதுமே ஷடானன
மங்களம் திசதுமே மகேஸ்வரீ
மங்களம் திசதுமே மஹேச்வர:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்னேசுவர மூர்த்தங்கள்

1. கயமுகாசுர சங்காரமூர்த்தி
2. அநந்தசாப நிவாரணமூர்த்தி
3. பிரவணமூர்த்தி
4. புராண பரிபாலனமூர்த்தி
5. பரமாசாரியமூர்த்தி
6. திருமுறைகண்டமூர்த்தி
7. வரம்பெறுமூர்த்தி
8. விக்னேசுவரமூர்த்தி
9. அச்சறுத்தருண்மூர்த்தி
10. மூலாதாராதிபதிமூர்த்தி
11. சர்வலோகநாயகப் பிரதட்சிணமூர்த்தி
12. ஆபத்சகாயமூர்த்தி
13. வலம்புரி விநாயகமூர்த்தி
14. விகடசக்ர விநாயகமூர்த்தி
15. கூர்ம சங்காரமூர்த்தி
16. சந்திர சிக்ஷாரக்ஷகமூர்த்தி
17. இந்திரானுக்கிரகமூர்த்தி
18. அகத்தியானுக்கிரகமூர்த்தி
19. இராவண கர்வபங்கமூர்த்தி
20. மகா பாரதலிகிதமூர்த்தி
21. விண்டு விநாயகமூர்த்தி
22. சமிமந்தாரானுக்கிரகமூர்த்தி
23. பாலசந்திரமூர்த்தி
24. மயூரேசமூர்த்தி
25. புஜாங்காபரணமூர்த்தி
26. வல்லாளமூர்த்தி
27. வக்ரதுண்ட விநாயகமூர்த்தி
28. வல்லபை கணேசமூர்த்தி
29. சித்திவிநாயமூர்த்தி
30. வித்தக விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்.

கடவுள் எங்கும் நிறைந்தவர். எனினும் சில இடங்களில் அவர் திருவருள் முனைந்து நிற்கிறது; அப்படி நிற்கும் இடங்களையே சாந்நித்தியம் நிறைந்த இடங்கள் என்கிறோம். சில இடங்களில் இவ்வாறு அருள் முனைந்து நிற்பதற்குக் காரணம் அருளாளர்கள் பூரித்துத் தாபித்த இடங்களாய் அவை இருப்பதேயாகும்.

விநாயகப் பெருமான் வினை தீர்ப்பதில் மிகவும் வல்லவர். '' விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான் '' என்று திருமுறை பேசுகிறது. '' ஆடிப்பாடி அண்ணாமலை தொழ ஓடிப்போகும் உள்ள வினைகளே '' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனாலே வினை தீர்க்கும் தலம் திருவண்ணாமலை என்பது புலனாகிறது.

திருவண்ணாமலை கோயில் வாயிலில் ஒரு பிள்ளையார் இருக்கிறார். அவருக்கு அல்லல் தீர்க்கும் பிள்ளையார் என்பது பெயர். இவர் சிறியவராக இருந்தாலும் வல்லமை வாய்ந்தவராக விளங்குகிறார். இந்தப் பிள்ளையாரைப் பற்றிய பழைய பாடல்,

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அல்லல் போம் வல்வினைபோம்
அன்னை வயிற்றில் பிறந்த தொல்லைபோம்
போகாத் துயரம் போம் — நல்ல
குணமதிகமாம் அருணைக் கோபுரத்தில்
வைகும் கணபதியைக் கைதொழுதக்கால்"

இந்தப் பிள்ளையார் நம் வினைகளைப் போக்குவதில் மிகவும் ஆற்றல் படைத்தவர். வினைகளைப் போக்குவது தான் மிகவும் அரிய செயலாகும்.

விருத்தாசலம் விநாயகர் கோவில் நுழை வாயிலில் பூமிக்கு அடியில் "ஆழத்துப் பிள்ளையார்" என்று பொருட் செல்வமும், அருட் செல்வமும், கல்விச் செல்வமும் தருவதில் சிறந்தவராக விளங்குகிறார். அதனை,

"திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் போற்றுவோம்."

திருக்கடவூரில் உள்ள "கள்ள விநாயகர்" என்ற சிறப்புப்பெயர் பெற்றவர் விநாயகர். இவர் மரண பயம் நீக்குவதில் மிகவும் வல்லவர். இத்தலம் மார்க்கண்டேய ருக்கு மரணமிலாப் பெருவாழ்வு வழங்கிய தலமாகும். இந்த விநாயகரை,

"தண்டாயுதமும் சூலாயுதமுந்தாங்கி யென்னைக்
கண்டாவிகொள்ள நமன் வரும் வேளையில்
காத்திடுவாய்
வண்டார வாரஞ்செய் மலர்ச்சோலை வளப்பமுடன்
விண்டாவிய கடவூர் வாழும் கள்ள விநாயகனே"

என்று பாடுகிறார் முனிவர்.

மதுரை மீனாட்சி அம்மன் சந்நிதிக்குள் நுழைவதற்கு முன்பு உள்ள மண்டபத்தில் இருக்கின்றது சித்தி விநாயகர் சந்நிதி, மணிவாசகப் பெருமான் குதிரை வாங்கப் புறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் பொழுது இந்த விநாயகரை வழிபட்டுச் சென்றுள்ளார் என திருவிளையாடற் புராணம் கூறுகிறது. இவரை நினைத்து எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் காரிய சித்தியாகும். திருமணமாக வேண்டுமானாலும், பிள்ளைப் பேறு கிடைக்க வேண்டுமானாலும், வேலை கிடைக்க வேண்டுமானாலும், செல்வம் கிடைக்க வேண்டுமானாலும் இவரை வேண்டினால் உடனே கிடைக்கும் என்பதனை,

" உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும் தறி நிறுவி
உறுதியாகத் தள்ளரிய அன்பெனும் தொடர்பூட்டி
இடைப்படுத்தி
குறுகட்பாசக் கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
கரித்துண்டு
கருணையெனும் வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை"

நினைத்து வருவினைகள் தீர்ப்போம் என்பதனால் அறியலாம்.

காசியில் உள்ளவர் துண்டிராஜ கணபதி ஆகும். இவரை வணங்கினால் எல்லாத் தெய்வங்களையும் வணங்கிய பலன் கிடைக்கும். பிள்ளையார் பட்டியில் உள்ள கற்பக விநாயகரை வணங்கினாலும் இதே பலன் கிடைக்கும். கற்பக மரத்திற்குத் திருவருள் வழங்கியவராதலால் வழிபடுவோர் அனைவருக்கும் எல்லா வகையான இன்பங்களையும் வழங்குவர்.

## துண்டி விநாயகர் பாடல்

" தருவான் கற்பகச் சோலையே
எல்லாம் தரும் பெரிய பதுமநிதியே
சங்க நிதியே - உண்ண உண்ணத்
தெவிட்டாத தண்ணமுதின் அதிமதுரமே
கருபலமே என்றுபாடி உருக அருள்
காசிவாழ் துண்டிராஜா கணபதியெனும்
குணமேருவே அருட் கருணைநிதிக் கடவுளே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பக விநாயகர் பாடல்

"பிள்ளையார் பட்டிப் பெருநகரில் வீற்றிருந்தே
உள்ளுவார் துன்பம் ஒழிக்கின்ற தெள்ளமுதே
என்னருமைக் கற்பகமே என்னுள்ளத்தில்
நீ இருக்க, துன்னுமோ முன்னைவினை சொல்."

பொல்லாப் பிள்ளையார் என்பது திருநாரையூர்ப் பிள்ளையாராகும். இவரே தேவாரத் திருமுறைகளை வெளியாக்கியவர். ஆகவே ஞானம் தருகின்ற பிள்ளையார் ஆவார்.

"மருப்பை ஒருகைக் கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பை அடிபோற்றத் துணிந்ததால் - நெருப்பை
அருந்த எண்ணுகின்ற எறும்பன்றே
அவரை வருத்த எண்ணுகின்ற மலம்"

உலக வாழ்க்கையில் என்ன செல்வம் பெற்றாலும் இறுதியில் ஞானம் பெறுவதே குறிக்கோள். இந்த ஞானத்தைத் திருநாரையூரிலுள்ள பொல்லாப் பிள்ளையாரை வணங்க வரந் தந்தருள்வார். திருவலஞ் சுழியில் உள்ள விநாயகரோ தும்பிக்கை வலமாகச் சுழித்து விளங்குபவர். இவரே மகாபாரதத்தை எழுதியவர். அகத்திய முனிவருக்கு உபதேசம் செய்தவர். எழுத்தை முதலில் அறிமுகப் படுத்தியவர்.

இதுகாறும் கூறியவற்றினால்,

திருவண்ணாமலைப் பிள்ளையார் வினை நீக்கஞ் செய்பவர். விருத்தாசலப் பிள்ளையாரோ பொருட் செல்வம், கல்விச் செல்வம் தருபவர். திருக்கடவூர்ப் பிள்ளையார் மரண பயம் நீக்குபவர். காசிப் பிள்ளையார் எல்லாத் தெய்வங்களையும் வணங்கும் பலனைத் தருபவர். அங்கே போகமுடியாதவர்கள் பிள்ளையார் பட்டிப் பிள்ளையாரை வணங்கப் பலன் தருவார். திருநாரையூர்ப் பிள்ளையார், திருவலஞ்சுழிப் பிள்ளையார் ஞானந் தருபவர்கள். முறிவண்டிப் பிள்ளையார் வண்டிகளை முறிக்காமல் பிரயாணம் இனிதாகச் செய்பவர் என்பதனை அறிந்து நாமும் தரிசித்து அருள் பெற்று காரிய சித்தியைப் பெறலாம்.

•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# விஞ்ஞான உலகில் மெய்ஞ்ஞான விநாயகர்.

விநாயகர் உருவினைப் பார்க்கும் பொழுது அத்திரு வுருவம் இன்று உலகெங்கும் போற்றப்படும் சுற்றச்சூழல் பாதுகாப்பில் இன்றியமையாத தேவையினை வலியுறுத்தும் வடிவாகவே விளங்குகின்றது. மனிதனின் நல்வாழ்விற்கு மிருகங்களும், பிற அஃறிணையும் பெரிதும் உதவுகின்றன. ஆகையால் மனிதன் மிருகங்களையும், பறவைகளையும். அவை அழிவுபடாத வகையில் பேணிப் பாதுகாத்தல் வேண்டும். அவற்றிடம் அவன் இரக்கமுடையவனாகவும் இருத்தல் வேண்டும், இன்று உலகின் எல்லா நாடுகளிலும் மிருகங்களையும், பறவைகளையும் பாதுகாப்பதற்கான செயன் முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிருகங்களில் பெரிதான யானையின் தலையும், மனித உடலும் அழகுற அமைந்தது விநாயக மூர்த்தம், மக்களுக்கும் மிருகங்களுக்கும் இடையே தேவையான வாழ்க்கை முறை ஒருமைப்பாட்டினை உணர்த்தும் பெரிய தத்துவ தெய்வமாகவே விளங்குகின்றது.

மேலும் புலால் மறுத்தலின் தேவையினையும் சைவ உணவின் மேன்மையினையும் யானைமுகம் குறிப்பால் உணர்த்துவதாகவும் உள்ளது. மிருகங்களில் யானை கம்பீரத் தோற்றமுடையது. அயராத உழைப்பு, திடபலம், அறிவு முதலியன அமையப் பெற்றது. இத்தகைய மேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைகளுடன் அளவிடற்கரிய சக்தியின் அரிய உருவமாக விளங்கும் யானை உண்பது தாவர உணவினைத்தான்.

அந்த யானையின் பிளிறுதலில் 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தினையும் கேட்கலாம். இவ்வகையில் மக்களுக்கும், மிருகங்களுக்கும், தாவரங்களுக்கும் இடையே தேவையான வாழ்முறைக் கட்டுப்பாடும், ஒருமைப்பாடும் இருத்தல் வேண்டும் என்ற விஞ்ஞானக் கோட்பாட்டினை உணர்த்தும் மூர்த்தமாகவும் விநாயகர் விளங்குகிறார்.

சமய வழிபாட்டில் முதல் வழிபாடு விநாயக மூர்த்திக்கே. அப்படியே மக்களின் முதற்கடமை ஒருமைப்பாட்டு உணர்வினைப் போற்றுதலேயாகும்.

ஓங்கார வடிவம் - விநாயகரின் திருவுருவம், ஒருமைப்பாட்டின் தெய்வீக உருவம், ஓங்காரம் எல்லா எழுத்தொலிகட்கும் முதலாய் அமைந்தது, அஃது அகத்தும் புறத்தும் இயற்கையாய் ஒலிக்கும் ஓசை.

ஓங்காரம் - படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் இயற்ற வல்லது. எச்செயல்களையும் தடைகள் இல்லாமல் வெற்றியுடன் முடிப்பதற்கு, அச்செயலைத் தொடங்குவதற்கு முன்னர் முதற்கண் வழிபடப்பெறும் கடவுள் ஒருமைப்பாட்டு உருவினரான விநாயகரே.

ஒருமைப்பாடு எங்கும் எதிலும் வேண்டும். வாழ்வின் எல்லா அம்சங்களிலும் அது வியாபித்திருக்க வேண்டும். ஆணின்றிப் பெண்ணில்லை பெண்ணின்றி ஆணில்லை. "சக்தியும் சிவமுமாந்தன்மை இவ்வுலகமெல்லாம்" என்கிறது சிவஞான சித்தியார்.

விநாயக மூர்த்தம் இதனை அழகுற வெளிப்படுத்துகிறது. அதில் தந்தமுள்ள பகுதி ஆண்கூறு தந்தமில்லாத பகுதி பெண்கூறு, இவ்வாறு விநாயக மூர்த்தத்தில் ஆண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் என்ற இருகூறுகள் பால் பாகுபாட்டினைக் கடந்து ஒருங்கிணைந்து செயல்படுதல், ஆண் - பெண் ஒருமைப்பாட்டின் இன்றியமையாத் தன்மையை வலியுறுத்தி விளக்குகிறது.

உலகில் நிகழும் எல்லாச் செயல்களும் படைத்தல், காத்தல், மறைத்தல், அழித்தல், அருளல் என்ற ஐந்து பெரும் தொழில்களில் அடங்கும். விநாயகரின் ஐந்துகரங்களில் அமைந்துள்ள ஐந்து பொருள்களும் இந்த ஐந்து தொழில்களை உணர்த்துவதாகவே உள்ளன.

ஒரு கரத்தில் ஏந்தியுள்ள பாசம் படைத்தல் தொழிலைப் புலப்படுத்தும், பாசம் பிறவிக்கு வழிகோலுகின்றது அல்லவா? ஒற்றைக் கொம்போ காத்தல் தொழிலைக் காட்டும். துதிக்கை மறைத்தல் தொழிலைத் தெரிவிக்கும், அங்குசம் அழித்தல் தொழிலைக் காட்டும், மோதகம் அருளல் தொழிலை அறிவிக்கும், ஐந்தொழில்களையும் அளவோடு ஒருங்கிணைந்த வகையில் செயல்படுத்தும் அழகிய ஞான மூர்த்தமே ஐங்கரத்து விநாயகர்.

விநாகய மூர்த்தம் ஞானசொரூபம், அது பரஞானம், அபரஞானம் ஆகிய இரண்டினையும் அறிவிக்கும் குறிகளைக் கொண்ட அழகிய மூர்த்தம். அதனுடைய ஒடித்த கொம்பு அபரஞானத்தைக் குறிக்கும். ஒடியாத முழுமையானகொம்பு பரஞானத்தைக் குறிக்கும். இஃதன்றி, ஒடியாத கொம்பும் ஒடிந்த கொம்பும் முறையே பதிஞானம், பாசஞானம் ஆகியவற்றினைக் குறிப்பதாகவும் அமையும், பாசஞான நூலான பாரதம் எழுதத்துணை செய்தது ஒடிக்கப்பெற்ற கொம்பு. பாசஞானம் கலைஞானமாகிச் சிவஞானத்திற்கு வழிகோலும் உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெஞ்ஞானம் திருப்பெருகும் சிவஞானம் என்ற மும்மதத்தினையும் ஒருங்கிணைந்த ஞானமதத்தின் ஒப்பற்ற தலைவராக விநாயகக் கடவுள் விளங்குகின்றார்.

சமய பேதங்களைக் கடந்தவர். சைவர்க்கும் வைணவர்க்கும் வழிபடுகடவுளாக விளங்குபவர் விநாயகர். மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயக மூர்த்தம் ஒன்றை வழிபட்டால் போதும் சிவன், சக்தி, விஷ்ணு ஆகிய பெரும் தெய்வங்களை வழிபட்ட பலன் கிட்டும். ஏனெனில் அத்தெய்வங்களின் அம்சங்கள் விநாயகர் திருவுருவில் அமைந்துள்ளன. விநாயகரின் நாபி பிரமம் சொரூபமாக விளங்குகின்ற திருமுகம் திருமாலின் அம்சம், இடது பாகம் சக்தி வடிவம், வலப்பாகம் சூரிய அம்சம். ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் வகுத்த ஆறுசமயங்களிலும் விநாயகர் வழிபாடு உண்டு.

வெள்ளெருக்கு முதல் கருங்கல் வரை பேதமின்றிப் பல பொருள்களைக் கொண்டும் விநாயகர் வடிவம் செய்து வழிபடலாம்.

வெள்ளெருக்கு, மஞ்சள், சந்தனம், மலர், மரம், சுதை, மண், கருங்கல், பொன், வெள்ளி, செம்பு, பளிங்கு போன்ற பல பொருள்கள் விநாயகர் வடிவம் அமைக்கப் பயன்படுகின்றன. விநாயக சதுர்த்தியன்று பலவகையான உருவங்களை அமைத்து அந்த உருவ விநாயக வழிபாட்டினை ஒவ்வொரு இடத்துக்கும் அவரவர் மரபுக்கும் ஏற்ப வழிபடுவர்.

அன்பு கணபதி இல்லாத இடமே இல்லை. எங்கும் எவர்க்கும் எளிவந்தருளும் விநாயகப் பெருமானை வழிபட வேண்டப்படுவதெல்லாம் அன்பு ஒன்றுதான். அன்பு வழிபாட்டில் மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்துகிறார் விநாயகப் பெருமான்.

காலம் இடமெல்லாம் கடந்து நிற்பவர் கணபதி. ஓங்காரம் அநாதி, அதற்குக் காலம் கற்பித்தல் முடியாது. ஆகையால் ஓங்கார வடிவினரான விநாயகரும் அநாதி. பல காலங்களையும் பிணைத்து நிற்பதை வேதங்களும், புராணங்களும் தெரிவிக்கின்றன. வேதகாலத்திலேயே விநாயகர் வழிபாடு இருந்திருக்கின்றது என்று தெரிகிறது. காலத்தினால் மட்டுமன்றி இடத்தினைப் பொறுத்த அளவிலும் ஒருமைப்பாட்டினை வளர்க்கும் ஒப்பற்ற தெய்வமாக விநாயகர் வியாபித்து நிற்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயக சதுர்த்தியன்று மண்ணினால் செய்த விநாயகர் திருவுருவினையே பெரும்பாலோர் விரும்பி வழிபடுகிறார்கள். பிறந்தமண்ணை - பிறந்த பொன்னாட்டைப் போற்றுதல் வேண்டும் என்ற உட்குறிப்பினையும் கொண்டது போலும். ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'' என்றார் மகாகவி பாரதியார். விநாயகர் வழிபாட்டில் ஒருங்கிணைந்த தெய்வபக்தி தேசபக்தியாகப் பரிமளிக்கிறது. நாடெங்கும் மக்களால் கொண்டாடப்பெறும் விநாயகசதுர்த்தி விழா தேசிய ஒருமைப்பாட்டினையும் ஓங்கச் செய்கிறது. மகாராஷ்டிரத்தில் விநாயக சதுர்த்தி விழா தேசீய விழாவாகவே நடக்கிறது.

பூமி விளைந்தால்தான் நாட்டில் பஞ்சம் இருக்காது. நல்ல பூமி விளைச்சலுக்கு மண் வளம் வேண்டும். நீர் வளம் வேண்டும். மண்ணினால் செய்த விநாயகர் திருவுருவம் மண்வளம் பாதுகாக்கப்படல் வேண்டும், போற்றப்படல் வேண்டும் என்பதனை அறிவுறுத்துவதாக உள்ளது. மேலும் நிலமும் நீரும் தக்கவாறு ஒருங்கிணைந்தால்தான் நல்ல விளைச்சல் உண்டாகும். கிடைக்கும் நிலமும் நீரும் நல்ல முறையில் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்று விஞ்ஞானிகள் வெகுவாக வலியுறுத்துகின்றனர். இந்த விஞ்ஞானக் கருத்தினையே மண்ணினால் விநாயகர் உருவினைச் செய்து சதுர்த்தி விழாக் கொண்டாடி பின்னர் நீரில் அதனை விட்டு விடுகிறார்கள். (இது வடதேச மரபு)

இது மாத்திரமல்லாமல் மார்கழி மாதத்திலும் இருபத்தியொரு நாட்கள் விநாயக விரதமாக, மிகச் சிறப்பாக விரதம், பூசை, புராண படனம் ஆகியன எல்லாம் சேர்ந்து நியம நிஷ்டைகளோடு அநேகர் விநாயகரைப் போற்றித் துதித்து வணங்குகிறார்கள்.

---

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடரும் வினைகளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## பக்தனுக்காகப் பரிந்துண்ட (பசியாறிய)

# கணேச பிள்ளையார்.

சேர சோழ பாண்டிய நாடுகளுக்குள் வளப்பம் மிகுந்த சோழவள நாட்டை மிகச் சிறப்பாக இராஜராஜ சோழன் ஆண்டுவந்த பொற்காலம். பக்தி, சத்தியம், தெய்வீகம் நிரம்பிய காலகட்டம்.

அவரது ஆட்சிக்குட்பட்ட திருநாரையூர் என்ற திவ்விய கிராமத்தில் நம்பி என்ற தெய்வத் திருவருள் நிறைந்த பிராமணச் சிறுவன் வாழ்ந்து வந்தான். நம்பியின் தந்தையோ தினமும் தவருமல் அவ்வூரில் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் பூசைசெய்பவர். அப்படிச் செய்யும் பூசையில் பிள்ளையாருக்கு நிவேதனம் செய்யும் நைவேத்தியத்தை பிரசாதத்தை நம்பியிடம் கொடுத்து '' நம்பி ! பிள்ளையார் நிவேதனம் செய்ததுபோக மிகுதியான இந்தப் பிரசாதத்தை உள்ளன்போடு உண்டு நல்ல அறிவாளியாக ஆவாய் '' என்று கூறிக் கொடுப்பார். ஒருநாள் தந்தை நம்பியை அழைத்து '' நம்பி ! மூன்று நாட்களுக்கு வேலை நிமித்தமாக வெளியூர் செல்கிறேன். பிள்ளையாருக்குத் தவருமல் பூசை செய்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

நம்பி வேதங்களைக் கற்று வந்ததனுல் மிகுந்த பக்தி சிரத்தையுடன் பூசை செய்தான். நைவேத்தியத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாருக்குப் படைத்து விட்டுச் சற்றுநேரம் காத்திருந்தான், பிள்ளையார் சாப்பிடாமல் நைவேத்தியப் பிரசாதம் அப்படியே இருந்தது. நம்பிக்கு மிகுந்த துக்கம்.

பிள்ளையாரே, கஜமுகனே, விநாயகரே, கணபதியனே, விக்கினங்கள் தீர்ப்பவனே, வித்தகவிநாயகனே நான் என்ன தவறு செய்தேன், நான் தேவரீருக்குப் படைத்த அமுதை திருவமுது செய்யவில்லை, நான் செய்த பூசையில் ஏதும் தவறா? நான்படைத்த அமுது நன்றாக இல்லையா? என்று கேள்வியாகக் கேட்டு ஓவென்று அழுதான் நம்பி. பிள்ளையார் அமர்ந்திருந்த மேடைமீது தலையை மோதிக் கொண்டு கதறினான். நம்பி அழுது துன்புறுவதைக் கண்ட பிள்ளையார் அவன் முன் தோன்றி படைத்த திருவமுதை நிவேதனம் செய்தருளினார். நம்பிக்குத் தாங்கொணாத ஆனந்தம்.

இந்தச் செய்தி ஊரெங்கும் பரவியது. அரசன் இராஜாதிராஜன் காதிலும் விழுந்தது. உடனே அறு சுவை உணவைத் தயாரித்து பிள்ளையாருக்குப் படைக்க ஏற்பாடு செய்தான். அவ்விதம் அந்த அமுத உணவை பிள்ளையார் திருமுன் படைத்து பிள்ளையாரப்பா! அரசன் இராஜாதிராஜன் மிகுந்த ஆசையுடன் தேவரீருக்காக கொண்டுவந்துள்ள உணவை திருவமுது செய்தருள மாட்டாயா? என்று இறைஞ்சிக் கேட்கவும், மீண்டும் பிள்ளையார் நம்பியின் ஆசையை நிறைவேற்றினார்.

மன்னன் அகமும் முகமும் மகிழ்ந்து நம்பியைப் போற்றினான். 'நம்பியாண்டார் நம்பி' என்று அன்று முதல் எல்லோரும் போற்றினார்கள். நம்பியாண்டார் நம்பி ஆழ்ந்த பக்தியும் அறிவாற்றலும் உடையவராய் வளர்ந்ததோடல்லாமல் தெய்வத்தின் அருளையும் பரிபூரணமாகப் பெற்றிருந்ததினால் தில்லையம்பலத்தில் ஆலயத்தில் அறையொன்றினுள் பூட்டி வைக்கப்பட்டிருந்த தேவாரத் திருமுறைகளை மீட்க மன்னவன் வேண்டினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வேதியர் மறுத்தனர். ஆனால் நம்பியாண்டார் நம்பி சமயகுரவர் மூவரையும் திருவுலாவரச்செய்து அறைக் கதவைத் திறக்கச் செய்தார். அந்த அறையில் தேவாரப் பதிகங்கள் எழுதப்பெற்ற ஓலைச் சுவடிகள் குவிந்து கிடந் தன. கரையான்கள் மேய்ந்துகொண்டிருந்தன. கரையான் உண்டது போக மீதமுள்ளதை நம்பியாண்டார் நம்பி பன் னிரு திருமுறைகளாகத் தொகுத்து அளித்தார்.

திருநாரையூரிலும் தில்லையிலும் இப்பொழுதும் இவரது உருவத் திருமேனிகள் சிலாரூபமாக பூஜிக்கப்படுகின்றன.



# இறைவன் அருள்

பசுவின் உடம்பு முழுவதும் பால் பரந்து இருப்பினும் கொம்பைப் பற்றி இழுத்தால் பால் வருமா? வாலைப் பிடித்து வருடினால் பால் கிடைக்குமா? கிடைக்காது. மடி யிலே கை வைத்தால்தான் பால் கிடைக்கும்.

அதுபோல இறைவன் கருணை எங்கும் நிறைந்திருந்தா லும் திருக்கோயில் பசுவின் மடி போன்றது. மந்திர யந் திரத்துடன் கூடியதும், ஆன்றோர்கள் அருளாளர்கள் வழி பட்டதுமாகிய ஆலயத்தில் உள்ள மூர்த்தியை என்புருக அன்புடன் வழிபட்டால் இறைவனுடைய அருள் கிடைக் கும்.

— சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் வழிபாடு

விநாயகப் பெருமான் மந்திர சொரூபம். சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் ஆகிய இரு பிரணவ மந்திரங்களின்மீது பார்வதி, பரமேசுவரர் தங்கள் திருக்கண் சாத்த அம் மந்திரங்கள் யானை உருவங்கொண்டு மருவ அதனின்று அவதாரம் செய்தவர் விநாயகப் பெருமான். அதனால் சதை, ரத்தம் ஆகிய கலப்பு இல்லாமல் முழுவதும் மந்திர சொரூபமானவர் விநாயகப் பெருமான்.

விநாயகரை வழிபடாது தொடங்கிய எக்காரியமும் நலமே நிறைவேறாது.

''என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்
முன்னரே உனதுதாள் முடியுறப் பணிவரேல்
அன்னவர்தம் சிந்தைபோல் ஆக்குதி, அல்லதுனை
உன்னலார் செய்கையை ஊறு செய்திடுதி நீ''

என சிவபெருமானே ஸ்ரீ விநாயகப்பெருமானிடம் அவரது அவதாரத்தின் போதே, திருவாய் மலர்ந்தருளியதாகப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது.

ஸ்ரீ விநாயகரை வழிபட்டால் மூன்று தேவியர்களின் முழு அனுக்கிரகமும் கிடைக்கிறது.

வாக்குக்குத் தேவி — சரஸ்வதி
மனதுக்குத் தேவி — பார்வதி
செல்வத்துக்குத் தேவி — மகாலக்ஷ்மி

85719

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய மூவரே அத்தேவியர். இதனாலேயே முழுவதும் உணர்ந்த ஔவைப் பிராட்டியார்,

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

என்று கூறிவைத்தார்கள்.

ஆகவே எல்லாவற்றிற்கும் மேலாகவும் எக்காரியத்துக்கும் முன்னதாகவும் விநாயகப்பெருமான் வழிபாடு, பூஜை, கணபதி ஓமம் - பிரார்த்தனை என்பன நடைபெறுகின்றன, நடைபெறவேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

## கற்பூர தீபம்

வெண்மையான கற்பூர வடிவம் போலவே ஆன்மாக்களும் இயல்பாகவே வெண்ணிறமான தூய தன்மையினைக் கொள்ளுதல் வேண்டும். கற்பூரமானது அக்கினி பற்றிய விடத்தே தன்வடிவமாக விளங்காது அவ்வக்கினி ஒளிமயமாக நிற்பதுபோல் ஆன்மாக்களும் பிரும்மஞானக்கினி பற்றிய விடத்தே மாயத் தன்மை நீங்கி, பிரம்மத்துவம் விளக்கமுற்று நிற்கும். பின்னர் அக் கற்பூரம் யாதோர் பற்றுமில்லாமல் தன் வடிவம் முழுவதும் கரையப்பெற்றும், வானிற் கலந்து அத்துவிதமாய் விளங்குதல் போல ஆன்மாக்களும் தூல, சூட்சும, காரண உடல்கள் கரையப் பெற்று சகல பற்றுக்களும் ஒழிந்து பரமாத்மாவுடன் கலந்து பேரின்பப் பெருவாழ்வு அடையும்.

இவ் உண்மையை உணர வைத்த யுக்திக்கு ஏதுவான நற்குறியே கற்பூர ஆரத்தி. அக் கற்பூர ஆரத்தியை இரு கரங்களாலும் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டால் நேத்திர ஆரோக்கியத்துடன் ஞானக்கண்ணும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஏகவிம்சதிபத்திரம் — 21 பத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாசீபத்திரம் | - | இலவமிலை - மாசி இலை |
| 2. | பிருகதீபத்திரம் | - | கண்டங்கத்தரி |
| 3. | பில்வ பத்திரம் | - | வில்வமிலை |
| 4. | தூர்வாயுக்மம் | - | அறுகு |
| 5. | துர்த்தூர பத்திரம் | - | ஊமத்தை இலை |
| 6. | பதரிபத்திரம் | - | இலந்தை இலை |
| 7. | அபாமார்க்கபத்திரம் | - | நாயுருவி இலை |
| 8. | துளசிபத்திரம் | - | துளசி இலை |
| 9. | சூதபத்திரம் | - | மாவிலை |
| 10. | கரவீரபத்திரம் | - | அலரி இலை |
| 11. | விட்டுணுகிராந்த பத்திரம் | - | விட்டுணுக்கிராந்தி இலை |
| 12. | டாடிமீபத்திரம் | - | மாதுளை இலை |
| 13. | ஆமலகபத்திரம் | - | நெல்லி இலை |
| 14. | மருவகபத்திரம் | - | மருக்கொழுந்து |
| 15. | சிந்தூரபத்திரம் | - | நொச்சி இலை |
| 16. | ஜாஜீபத்திரம் | - | சாதிபுஷ்பமிலை (மல்லிகை) |
| 17. | கந்தலீபத்திரம் | - | வெள்ளறுகு |
| 18. | சமீபத்திரம் | - | வன்னியிலை |
| 19. | பருங்கராஜபத்திரம் | - | கரிசலாங்கண்ணி இலை |
| 20. | அர்ச்சுநபத்திரம் | - | மருத இலை |
| 21. | அர்க்கபத்திரம் | - | எருக்கமிலை |

## அன்பு

அன்பு என்பது மிகமிகப் பெரியது. அதை உணர்ந்தவர்க்கே கொடுக்க வேண்டும். ஆண்டவன் ஒருவனே உயர்ந்தவன். அவன்பால் செலுத்தும் அன்பு வீணாவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஏகவிம்சதிபுஷ்பாணி — 21 புஷ்பங்கள்

| | | |
|---|---|---|
| 1. | ஜாஜீபுஷ்பம் | - ஜாதிப்பூ |
| 2. | சாவந்திகாபுஷ்பம் | - செவ்வந்திப்பூ |
| 3. | சம்பகபுஷ்பம் | - சண்பகப்பூ |
| 4. | வகுளபுஷ்பம் | - மகிளம்பூ |
| 5. | பாடலீபுஷ்பம் | - பாதிரிப்பூ |
| 6. | புன்னுகபுஷ்பம் | - சுரபுன்னைப்பூ |
| 7. | துரோணபுஷ்பம் | - தும்பைப்பூ |
| 8. | ரசாலபுஷ்பம் | - மாம்பூ |
| 9. | அமிருணாளபுஷ்பம் | - லாமிச்சம்பூ |
| 10. | கல்ஹாரபுஷ்பம் | - செங்குவளைப்பூ |
| 11. | கமல புஷ்பம் | - தாமரைப்பூ |
| 12. | மல்லிகாபுஷ்பம் | - மல்லிகைப்பூ |
| 13. | துர்த்தூரபுஷ்பம் | - ஊமத்தம்பூ |
| 14. | சம்யாக புஷ்பம் | - கொன்றைப்பூ |
| 15. | அர்க்கபுஷ்பம் | - எருக்கலம்பூ |
| 16. | கரவீரபுஷ்பம் | - அலரி |
| 17. | வில்வபுஷ்பம் | - வில்வம்பூ |
| 18. | மந்தாரபுஷ்பம் | - மந்தாரைப்பூ |
| 19. | கேதகிபுஷ்பம் | - தாழம்பூ |
| 20 | பாரிஜாதபுஷ்பம் | - பவளமல்லிகைப்பூ |
| 21. | டாடிமிபுஷ்பம் | - மாதுளம்பூ |

கருணை வள்ளல் கணபதியைத் தொழ
அருமைப் பொருட்கள் அனைத்தும் வருமே.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணபதி ஹோமம்

''மந்திரத்ன மஞ்ரஜூஷை'' என்னும் மந்திர நூலில் கணபதிக்கு ஹோமங்களில் உபயோகப்படுத்தும் தேங்காய், மோதகம், திரிமதுரம், கரும்பு முதலிய திரவியங்களால் ஏற்படும் காரிய சித்திகள் கூறப்பட்டுள்ளன.

விநாயகருக்கு,

நாரிகேளை: க்ருதோ ஹோம:
சதுர்த்யாம் ஸ்ரீப்ரதோ பவேத்

சதுர்த்தியில் தேங்காய்களால் ஹோமம் செய்வது ஐஸ்வரியத்தை அளிக்கும்.

ஸ்திலைஸ்தண்டுலைர் ஹோம:
லக்ஷ்மீவஸ்ய ப்ரதோபவேத்

எள்ளுடன் கூடிய அக்ஷதைகளை ஹோமம் செய்வதால் லக்ஷ்மியை வசமாகச் செய்யும்.

லாஜை: ஸ்திரி மதுரோ பேதை:
சதுஸ்ஸஹஸ்ர ஹோமம் கன்யாம் ப்ரயச்சேத்

தேன், பால், சர்க்கரை, இம் மூன்றையும் கலந்த பொரியினால் நான்காயிரம் ஹோமம் செய்ய நல்ல உத்தம கன்னி கிடைப்பாள்.

அனேனைவ விதானேன
கன்யாம் வரமவாப்னுயாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பர்த்தாவை விரும்பும் கன்னிகை இவ்விதமாகவே ஹோமம் செய்வதால் சிறந்த பர்த்தாவை அடைவாள்.

தத்ருவிலோடி தைர்லோணஃ
ஹோமோ நிசி சதுர்த்தினம்
ஸம்வாதம் குருதே வஸ்யம்
ததாந்யதபி மந்த்ரிணஃ
இத்யாதி சம்பவேத் ஸர்வம்

லவணம் (உப்பு) கலந்த தயிரை நான்கு தினம் இரவில் ஹோமம் செய்வதால் சபையில் நன்கு பேசுவான், இந்த மந்திரத்தை ஜபம், ஹோமம் செய்கின்றவனுக்கு இது போன்ற எல்லா சித்திகளும் ஏற்படும்.

மோதகைர் ஜுஹுயாத் ஷஷ்ட்யாம்
சதுஸ்ஸஹஸ்ரம் சதுச்சதம் வா

சஷ்டித் திதியில் நான்காயிரம் அல்லது நானூறு மோதகங்களை ஹோமம் செய்தாலும்,

அஷ்டம்யாம் குமுதைஃ
சதுர்த்தச்யாம் அபூபெபர்
ஜுஹுயாதிஸ்ட ஸித்தயெ

அட்டமியில் ஆம்பல் புஷ்பங்களை ஓமம் செய்வதாலும் சதுர்த்தசியன்று அப்பத்தை ஓமம் செய்வதாலும் இஷ்ட சித்திகள் ஏற்படும்.

ஏபிரேத்ரவ்யைஃ பர்வதினே ஓமஃ
ஸர்வகாம ப்ரதோபவேத் யத்னேன

முன்சொன்ன திரவியங்களாலேயே பௌர்ணமி, அமாவாசைத் தினங்களில் ஓமம் செய்தால் சிரமமின்றியே எல்லாவித அபீஷ்டங்களும் கைகூடும்.

ஆஜ்யாந்நைர் ஜுகுயாந் நித்யம்
அந்நவாந்வத் ஸராத்பவத்

ஒருவருட காலம் தினந்தோறும் நெய் கலந்த அன்னத்தை ஓமம் செய்தால் குறைவற்ற அன்னத்தை அடைவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954cc



பாயசேனக்ருதோ ஓம:
ஸமக்ராம் ஸ்ரிய மாவஹேத்

பாயாசத்தை ஹோமம் செய்வதால் நிரம்பிய ஐஸ்வர்யத்தை அடைவான்.

ஆஜ்ய ஹோமேந வஸயேத்
ப்ராணிந: ஸகலான் சுதீ:

ஆஜ்ய ஹோமம் வித்துவான் எல்லாப் பிராணிகளையும் தனக்கு வசமாகச் செய்துகொள்வான்.

நாளிகேர பலம் பக்குவம்
லோஷ்டவர்ச ஸமந்விதம்
ஜுஹுயாத் ப்ரத்ய ஹமந்த்ரீ
வாஞ்சிதம் மண்டலாத் பவேத்

நன்கு முற்றிய தேங்காயின் கீறுகளையும்* அதன்மட்டை கொட்டாங் கச்சிகளையும் தனித்தனியாக மந்திரத்துடன் ஒருமண்டலம் ஹோமம் செய்யும் உபாசகன் விரும்பிய பொருள்களை அடைவான்.

ஜுஹுயாத் அண்டபிர்த்ரவ்யை:
மதுத்ரய ஸம்யுதை:
வசயேத் பார்த்திவான் சர்வான்
தத்பத்னீ ரபி நிச்சயம்

பால், தேன், சர்க்கரை இவைகளுடன் சேர்ந்த அஷ்டத்ரவ்யங்களை ஹோமம் செய்வதால் எல்லா அரசர்களுடையவும், அவர்கள் குடும்பத்தினர்களுடையவும் அன்புக்கு பாத்திரமாவான்.

* ஆன்மாக்களிடம் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் உள்ளன. மேல்மட்டை மாயாமலம், நார் கன்மமலம், ஓடு ஆணவமலம் இந்த மும்மலங்களும் அகலவே சித்தசுத்தி என்ற வெண்மையான பருப்பு கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினாதிஷு சதுச் சத்வாரிம்சத்
தவாரம் விக்நராஜ ஸ்யமஸ்தகே
சுபோதகைஃ தர்ப்பயேத் ஸ்ரீப்ரஸித்தயே

நாற்பத்து நான்கு தினங்கள் காலை வேளையில் விக்ன ராஜனான ஸ்ரீ கணபதியினுடைய தலையில் சுத்தஜலத்தால் அபிஷேகம் செய்தால் ஐஸ்வரியத்தின் அபிவிருத்தி ஏற்படுகிறது.

லக்ஷத்ரயம் ஜபேந் மந்த்ரம்
இக்ஷுகண்டைர் தசாம் சதஃ
அபூபைஃ ராஜ்ய யுக்தைர்வா
ஜுஹுயாத் மந்த்ர ஸித்தயே

ஸ்ரீ சக்திகணபதி மகாமந்ரத்தை மூன்றுலக்ஷம் ஆவர்த்தி ஜபம் செய்து அதில் பத்தில் ஒரு பாகம் கரும்புத் துண்டுகளால் அல்லது நெய்யோடு கூடிய வெல்லப்பத்தினல் ஹோமம் செய்வதால் மந்திரஸித்தி ஏற்படும்.

ஸ்வகுரும் தனதான் யாத்யை
ப்ரிணயேத் பிரீத மானஸஃ

இந்த மந்திரத்தையும் ஹோம விதானத்தையும் உபதேசம் செய்த தனது குருவை அன்புடன் தனம் தான்யம் முதலியவைகளால் திருப்தி செய்து வைக்கவேண்டும்.

பூஜா பூர்வ வதாதிஸ்டா
ததஃ கார்யாணி ஸாதயேத்

ஹோமம் செய்வதற்கு கணபதி பூஜை செய்யவேண்டும். அதனுல் எல்லாக் காரியங்களும் சித்திக்கும்.

ஹுத்வா பூர்வைச்ச மதுர
த்ரயாக்தைஃ வசயேந் ரூபான்
சதுர்த்யாம் நாளிகேரேண
மஹதீம் ஸ்ரிய மஸ்னுதே
லவணைர் மதுஸம்யுக்தைர்
வசயேத் வநிதா ஜனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பு கூறியதுபோல் கரும்புத் துண்டுகள் அல்லது வெல்ல அப்பம் இவற்றை மூன்று மதுரத்தில் தோய்த்து ஓமம் செய்தால் அரசர்கள் வசமாவார்கள். சதுர்த்தி திதியன்று தேங்காயினுல் ஓமம் செய்தால் மிகுந்த ஐஸ்வரியத்தை அநுபவிப்பான். தேன் கலந்த லவணங்களை ஹோமம் செய்தால் கோரிய கன்னியை அடைவான்.

இதிஸித்த மனுமந் த்ரீ
ப்ரபுல்லை: கமலை: சுபை:
வசமா ஜாத்தி மனுஜா:
தண்டுலை: திலமிச்ரிதை:
ஹுத்வா ச்ரிய மவாப்னோதி:
வசயத் யகிலான் லோகான்
ப்ருதுகைச் சர்க்கராந் விதை:
வசம்நயதி ராஜாநம்
ஸக்துபி: பிராம்மணான் சுபை:
க்ருத ஹோமேந தனவான்
ஜாயதே நாத்ர சஞ்சய:

கரும்புத் துண்டுகளின் ஹோமத்தினுல் புத்திமானுக ஆகி, ராஜ்யஸ்ரீயை அடைவான், தென்னம்பழம் வாழைப் பழம் ஆகிய இவைகளை ஓமம் செய்தால் எல்லா உலகங்களையும், சர்க்கரையோடு கூடிய அவலை ஓமம் செய்வதால் அரசர்களையும், சத்துமாவை ஹோமம் செய்வதால் ப்ராம் மணர்களையும் நெய்யை ஹோமம் செய்வதனுல் நிரம்பப் பொருள் உள்ளவனுகவும் ஆவான்.

இவ்வாறு ஸ்ரீ மகா கணபதியின் ஹோமத்தைப் பற்றிய மந்திர சாஸ்திரங்களில் மகா பலன்களெல்லாம் கிட்டுமெனக் கூறியுள்ளன. இந்த மகா கணபதி மந்திரத்தை வேதங்களிற் கூறியுள்ள ஸ்ரீ சூக்தத்துடன் ஸம்புடிதமாய் (நடுவில் சேர்த்து) ஹோமம் செய்வதால் நிரம்பப் பொருள்களும், காரிய விருத்தியும் சத்ருஜயமும் ஏற்படும் என்பதை மந்திர சாஸ்திரங்களில் கூறியிருக்கிறது. இவ்விதமாக ஹோமத்துடன் பூஜை ஜபம் என்பன செய்யவேண்டும்.

85719

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஆனைமுகம்

எல்லாத் தெய்வங்கட்கும் மனிதமுகம் இருக்கும்போது விநாயகப் பெருமானுக்கு மட்டும் யானைமுகம் அமைந்திருப்பது ஏன்? இதற்கு ஏதாவது தத்துவம் உண்டா? விநாயகப் பெருமான் யானைமுகம் கொண்டமைக்குப் பல காரணங்கள் உள்ளன. யானை விலங்கினங்களில் மிகப் பெரியது. ஆற்றல் மிக்கது எந்தச் சிரமத்தையும் பொருட்படுத்தாமல் ஏற்பது, எவ்வளவு வலிமைகொண்ட எதிரியானாலும் அஞ்சாது வெற்றி கொள்வது. காலம் வரும்வரை காத்திருந்து எதிரியைத் தக்க சமயத்தில் அழிப்பது.

புநநானூற்றில் குறிப்பிட்டுள்ளபடி யானை மும்மதம் உடையது. ஏழுமுழம் உயர்ந்தது, ஐந்துறுப்பு உறத் தாழ்ந்தது. வனச்சரம், கிரிச்சரம், நதிச்சரம் ஆகிய மூன்று பருப்பு உடையது. உணவு கொடுத்து அன்புடன் பாதுகாக்கும் பாகன் தன் காலில் அடி வைத்தால் முடிமேல் வைத்து உயர்த்துவது. அவர்களுக்கு இடுக்கண் வராமல் காப்பது. இத்தனை நற்பண்புகளும் விநாயகப் பெருமானுக்கு உண்டு. விநாயகர் தனக்குத்தானே தலைவர். அவர் வேறு தலைவர் இன்றி விளங்கும் தெய்வம். மற்றைய தேவர்கள் யாருக்கும் இல்லாத ஆற்றல் கொண்டவர். எந்தச் சங்கடத்தையும் நீக்கி வெற்றியைத் தேடித் தருபவர். எவ்வளவு வலிமை கொண்ட எதிரியானாலும் அழித்து வெற்றி கொள்பவர். ஆன்மாக்களுக்குப் பக்குவம் வருந்துணையும் காத்திருந்து அவர்கள் பரிபாகம் தெரிந்து வினை எதிரியை வேரறத் தொலைப்பவர்.

குண்டலினியில் விளங்கி, மூலாதார முதல் ஆக்ஞை சக்கரம் வரை வளர்ந்து, அதைக் கடந்து துவாத சாந்தமாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் இடத்திலும் உயர்ந்து விளங்குபவர். ஐங்கரனுய் விளங்கி அபயக்கரம் நீட்டுபவர். பிரகிருதி தத்துவம், சுத்த வித்தியா தத்துவம். ஈசுவர தத்துவம் ஆகிய மூன்று இடங்களில் விளங்கி பிரகிருதி. தெய்வம், பரஞானம் என்ற மூன்று நிலையிலும் அவரவர்க்குத் தரிசனம் தருபவர்.

பூவும் நீரும் கொண்டு பொழுது தவருமல் பூஜிக்கும் அன்பர்கள் பக்தியுடன் பாதத்தைப் பற்றிஞல் அவர்களைத் தலையாய இன்ப உலகில் ஏற்றி வைப்பவர். பிற தெய்வங்களாலும் கூடச் சங்கடம் வராமல் பாதுகாக்கும் மூர்த்தி.

இப்படி யானைக்குள்ள குணங்கள் அனைத்தும் விநாயகப் பெருமானுக்கும் இருப்பதஞல் அந்த முகத்தையே தனக்கும் ஏற்றுக்கொண்டவர். உயர்திணை - அஃறிணை என்ற பாகுபாடின்றி, ஆண் - பெண் என்ற பேதம் இன்றி எல்லாவற்றையும் கடந்து விளங்கும் நிலையைத் தெரிவிக்க ஒற்றைக் கொம்பும், யானை முகமும், தேவ உடலும் கொண்டு விளங்குபவர். யானை முகமும் உடலும் ஒருசேரப் பார்த்து மகிழுங்கால், அதுவே ஓங்கார வடிவமாக விளங்குவதும் புலஞகும்.

குள்ளக் குள்ளனை குண்டு வயிறனை
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழு.

## நவபாஷாணம் எவைகள்?

1. வீரம் 2. பூரம் 3. ரசம்
4. ரசகற்பூரம் 5. லிங்கம் 6. மனேசிலை
7. கெந்தகம் 8. கார்முகில் 9. தாழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954C.C



தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

KOHA
JPL

உ



# நவக்கிரக கணநாத விநாயகர்

மனிதர்களுடைய வாழ்க்கையில் கஷ்டங்களும், துன்பங்களும் அவரவர்களுடைய கிரக சஞ்சாரப்படிதான் நடைபெறுகிறது என்று ஆன்மீக வல்லுநர்கள் கூறுகிறார்கள். அப்படி கிரகசஞ்சாரப்படி நடக்கும் செயல்கள் நமக்கு மொத்தமாகப் பாதிப்பு ஏற்படுத்தாமல் விக்கினங்களைக் கட்டுப்படுத்தி நம்மைக் காத்து அருள்புரிபவராக கணநாதனாகிய விக்கினேசுவரர் இருக்கிறார் என்பது உண்மைத் தத்துவம் அப்படி கணநாதர் கிரகங்களைத் தன்னுள் எப்படி அடக்கி அருள்பாலிக்கிறார் என்பதைத் தன்னுடைய எட்டுக்கோடி அவதாரங்களில் ஒன்றில் மூலம் காட்சியளிக்கிறார்.

அதுதான் நவக்கிரக விநாயகர் தோற்றம். அதன்படி கணநாதர்:

சூரியனை தன் நெற்றியிலும்
சந்திரனை தன் நாபிக்கமலத்திலும்
செவ்வாயை தன் வலதுதொடையிலும்
புதனை தன் வலது கீழ்க்கையிலும்
வியாழனை தன் சிரசிலும்
வெள்ளியை தன் இடது கீழ்க்கையிலும்
சனியை தன் வலதுமேல் கையிலும்
ராகுவை தன் இடது மேல்கையிலும்
கேதுவை தன் இடது தொடையிலும் அடக்கிக் கொண்டு காட்சியளிக்கின்றார்.

— ஷண்முகபிரியா

தலைவன் தாள்பணிந்து வணங்கிடுவோம். உறுதுயர் நீங்கி, உண்மை நிலை தெளிந்து பேரானந்தம் அடைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

யோகம் யோகவிதாம் விதூத விவித
வ்யாஸங்க சுத்தாசய
ப்ராதுர்பூத ஸுதார ஸப்ரஸ்ருமர
த்யாநா ஸ்பதாத்யா ஸிநாம்
ஆநந்த ப்லவமாநபோத மதுரா
மோதச் சடா மேதுரம்
தம் பூமாந முபாஸ்மஹே பரிணதம்
தந்தா வலஸ்யாத்மநா.

ஆதியும் அந்தமுமில்லாத மஹாமாயையினுடைய மஹிமையால் தோன்றிய பல திறப்பட்ட விஷய வாஸனைகளை யகற்றிய காரணத்தால், மிகவும் பரிசுத்தமடைந்த ஹ்ருதயத்திலிருந்து சுரக்கின்ற அமுதப் பெருக்கே போன்ற சிந்தையெனும் இருப்பிடத்தில் உறைகின்றவரும், யோக விதிகளை முறைவழுவாது உணர்ந்து நன்கு பரிசீலனை செய்து அநுபவம் கைவரப் பெற்றவர்களுமான யோகிகளுக்கே அடையத் தக்க இருப்பிடமாயிருப்பவரும், ஆதந்தமென்னும் அமுதத்திலிருந்து பொங்கியெழுகின்ற ஞானமென்னும் நறுமணம் நிறைந்து கமழும் யானைமுகத் தோற்றம் கொண்டு, எங்கும் எப்பொருளிலும் ஊடுருவி நிற்கும் அப்பரம் பொருளாம் பெருமைவாய்ந்த பரப்ரஹ்மத்தை நாங்கள் உபாஸனை செய்கின்றோம்.

ஸ்ரீ மீனுட்சி அச்சகம், நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org